தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, பங்குனி 5 (18-3-'61) சனிக்கிழமை | இதழ் 39

வேங்கை

"காஞ்சிபுரத்தை அடுத்த புதுப் பாளையத்தில் சிறுத்தை ஒன்று ஒரு பெண் உட்பட 17 பேரைக் காயப் படுத்தியது.

சிறுத்தையைக் கொல்ல காஞ்சி புரம் டாக்டர் வேதநாயகம் என்பவரும், நகராட்சி மன்ற உறுப்பினர் கோபால்சாமி (தி. மு. க.) என்பவரும் போனார்கள். இவர்களைத் தாக்கிப் பலத்த காயப்படுத்திவிட்டுச் சிறுத்தை தப்பிவிட்டது.

அன்சர் என்ற துன்னர் (தையற் காரர்) உடைவாள் (பிச்சுவா) சகிதம் போனார். அவரையும் பாய்ந்து தாக்கிவிட்டு சிறுத்தை ஓடிவிட்டது.

அதன்பிறகு இரவு, தீப்பந்தம், தாரை தப்பட்டையுடன், சிறுத்தை பதுங்கி இருந்த வயல்பக்கம் ஊராரெல்லாம் திரண்டு வேட்டைக்குப் போனார்கள். அவர்களில், ஜெயராமன் என்பவரை அடித்துக் காயப் படுத்திவிட்டுசிறுத்தைதப்பி விட்டது.

இதுவரை 7 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். 10 பேர் சிகிச்சை முடிந்து போய்விட்டார்கள்.

நேற்று மாலை சிறுத்தையைச் சுட்டுக் கொல்ல, டாக்டர் வேதநாயகம் போனார். ஆனால், சிறுத்தை அகப்படவில்லை.

இந்த சிறுத்தை வயல்பக்கங்களில் பதுங்கி இருக்கிறது. யாராவது விரட்டப் போனால் மட்டுமே தாக்க வருகிறது.

ஆகவே, சர்க்கஸ் கம்பெனியில் இருந்து, தப்பிவந்த சிறுத்தையாக இருக்கலாம் என்று, கருதப்படுகிறது.

இப்படி ஒரு செய்தி சென்ற கிழமை (10-3-61) தாளிகைகளில் வெளிவந்தது.

இந்த செய்தியைப் பார்த்த பிறகு தமிழ்நாட்டு வீரமும், உடல் வலிமையும், அறிவு வன்மையும், எந்த அளவுக்கு மற்றக் காரியங்களில் கெட்டு நாசமாகி இருக்கிறதோ, அந்த அளவுக்கு, இதிலும் கெட்டிருக்கிறது என்றே கருதவேண்டியிருக்கிறது.

ஒரு சிறுத்தையிடம் ஊரே திரண்டு போய்த் தோற்பதா? இத்தகைய போர்களுக்கு உறுதி மிக்க வேல் தான் சரியான ஆயுதம் என்றுகூட தெரியாதிருப்பதா?

சிறுத்தை என்பது புலியல்ல-ஏறக் குறைய புலியின் உருவம் பெற்றதேயொழிய புலிக்கும் சிறுத்தைக்கும் உடல் வலிமை, குணம் ஆயுள், ஆகிய பலவகையில் ஏராளமான வேற்றுமைகள் உண்டு.

மொழியறிவுகூட நமக்குக் குறைந்துவிட்டதாலேயே "சிறுத்தைப்புலி" என்று புலியின் பெயரையும் சிறுத்தையுடன் ஒட்டிச் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

சிறுத்தையின் குணம்.

சிறுத்தை, புலிபோல் பலசாலியான பிராணியல்ல-வீரம்செறிந்த பிராணியுமல்ல-கோழை. ஆனால், கொடிய துஷ்டத்தனம் உள்ளது. மனிதர்களிடம் பயப்படக்கூடியது. ஆனால், ஒருதடவையாவது மனிதனை எளிதாகத் தாக்கலாம் என்று தெரிந்து கொண்டால், பயங்கரமாகத் தாக்க ஆரம்பிக்கும்.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு இராமநாதபுரமாவட்டத்தைத் சேர்ந்த ஸ்ரீவில்லிபுத்தூரின் மேற்கே 'மடவார் வளாகம்' என்ற பகுதியில் கரும்புத்தோட்டத்தில் ஒரு சிறுத்தை வந்துவிட்டது.

அந்தப் பிரதேசம் மலைச்சாரலாதலாலும், அந்த மலைப்பகுதியில் சிறுத்தைகள் ஏராளமாக இருப்பதாலும், அங்கே சிறுத்தைகள் எப்போதாவது ஊருக்கு அருகில் தென்படுவது வழக்கம்.

அதுபோல் அப்போதும் சிறுத்தை வந்தது. கரும்புத் தோட்டப் புதருக்குள் ஒளிந்திருந்தது.

சிறுத்தை வந்திருப்பது தெரிந்தவுடன் இராசபாளையம் சாதிநாய்களில் வேட்டைப் பயிற்சி பெற்ற நான்கு நாய்களைக் கொண்டுவந்து கரும்புத் தோட்டத்தில் ஏவிவிட்டார்கள்.

சிறிதுநேரத்தில் அந்த நாய்கள் சிறுத்தையின் ஒளிவிடத்தை மோப்பத்தால் கண்டுபிடித்து கடித்து இழுத்துக்கொண்டு வந்தன. கையில் கூர்மையான வேல் வைத்துக் கொண்டிருந்த ஒருவர், நாய்களின் பிடியை சிறுத்தை திமிறிக்கொண்டிருக்கும்போதே குத்திக் கொன்று விட்டார்.

(9-ம் பக்கம் பார்க்க)

பச்சையப்பன் கல்லூரிக் கவியரங்கம்

முகில்

தலைவர் : கண்ணதாசன்

புன்முறுவல்



ஆக்கியோன் பழனி. முத்துதாசன்

தமிழ்த்தாய் வாழ்த்து :

முத்தொடு மணியு மீயும்
    முதுகட லுடுத்த ஞாலத்
தத்தனை மொழிக்குந் தாயாய்
    அமைந்துநற் புகழைப் பாடும்
முத்தமிழ்த் தாயே ஆவல்
    மூண்டிடக் கவிதை யாக்கும்
பித்தனும் எனக்கீங் கன்பாற்
    பிழைதவிர்த் தருள்வாய் தேவி !

அவையடக்கம் :

கவியரங்கின் தலைவர்க்குங் கற்றுத் தேர்ந்த
    கலைவல்ல பெரியோர்க்குங் கவிதை கேட்கச்
செவிதீட்டி யமர்ந்திருக்கும் அன்பர் கட்குஞ்
    செப்புகிறேன் பல்வணக்கம்; கவிதை யாக்கும்
அவியாத காதலினாற் கதிர்முன் தோன்றும்
    அகல்விளக்காய்ப் பெரியோர்முன் வந்தேன் நானென்
கவியோதக் கேட்டிருந்து குறைகள் காணின்
    கருணையொடு பேரன்பாற் பொறுப்பீ ரையா.

பொருள் :

செங்கதிரோன் கீழ்வானில் முறுவல் பூத்தான்
    செகத்துள்ளோர் துயர்மறந்தார் வலிமை பெற்றார் !
தங்கநிறத் தாமரையும் இதழ விழ்த்தே
    தாளாத வுவகையினால் முறுவல் கொண்டாள் !
பொங்கிவரும் பேரருவி கதிரோன் தந்த
    பொன்னொளியால் தனைமறந்தே முறுவல் பூக்கும் !
சங்குருளும் கடல்சூழ்ந்த உலகை வெய்யோன்
    சந்திக்கு மிடத்தெல்லாம் முறுவல் கண்டேன் !

பெண்களெலாம் சிரித்தாலே மகிமை போச்சு !
    புகையிலையை விரித்தாலோ மணமும் போச்சு !
என்பதினாற் கூறுகிறேன் நங்கை கட்கீங்
    கெழில்கூட்டும் புன்முறுவல் ஒன்றே சொந்தம் !
புன்முறுவல் ! அதுபோதும் பூவை யர்க்கு !
    புலியொக்குங் காளையரும் மயங்கி வீழ்வார் !
என்னென்பேன் முறுவல்கொள் சக்தி தன்னால்
    எளிதாக எப்பணியும் முடியும் காண்பீர் !

அனுதினமும் ஆலையிலே பொறிக ளூடே
    அகம்நோக உடல்நோக வியர்வை சிந்திப்
பணிசெய்வோன் பணிமுடித்தே வீட்டை நோக்கிப்
    பறந்துவர மனைக்கிழத்தி எதிரே நின்று
அணியொன்று மிலையெனினும் முறுவ லொன்றே
    அணியாகக் கொண்டேற்றே யழைத்தி ருத்திப்
பணிசெய்யின் அவனடைந்த துயர்ப றக்கும்;
    பசிசாகும்; இன்பமலர் பூக்கும் காண்பீர் !

பாலுண்ணும் சிறுபருவக் குழந்தை ஊறும்
    பாசத்தோ டணைப்போரைக் காணின் துள்ளும்;
சேலொக்கும் விழிகாட்டி முறுவல் பூக்கும் ;
    செகத்தினிலே யதற்கடிமை ஆகார் உண்டோ ?

வேலுக்கும் விரைந்தழிக்குங் கருவி கட்கும்
    வீழாதார் புன்முறுவற் கடிமை யாகிக்
காலுக்குள் வீழ்ந்திடுவர் தோல்விக் காகக்
    கடுகளவும் வருத்தமுறார்; மகிழ்வே கொள்வார் !

உளங்கவர்ந்த நங்கையினைக் காளை காணின்]
    உடனவளை நிழல்போலத் தொடர்வான் அன்னாள்
உளத்தினிலும் மெய்க்காதல் உண்டோ யென்றே
    உளவறிய முகம்பார்ப்பான் அவளு தட்டில்
ஒளிதிகழும் புன்முறுவல் தோன்றிற் றென்றால்
    உளம்மகிழ்வா னவளொப்பம் பெற்றான் போலத்
தெளிந்திடுவான் காதலர்க்கு முறுவல் ஒன்றே
    தெளிவாக ஒப்புதலைக் காட்டும் ஆடி !;

சாக்கடைபோ லுளம்படைத்தோர் வாழு கின்றச்
    சமுகத்துள் சாதியெனும் கொடிய நோயே
ஊக்கமுடன் பேய்ச்சிரிப்புச் சிரிக்குங் காண்பீர்
    உண்மையுளம் பேரன்பால் காதல் காட்டும்
ஆக்கமுடைப் புன்முறுவல் ஒளியி ழக்கும்;
    அழிவெய்தும்; காளையரே ! உள்ளந் தன்னில்
தேக்கிடுவீர் வீரத்தை ! காதல் ஈயும்
    தேனொக்கும் முறுவலினை வாழச் செய்வீர் !

இன்பத்தை விரும்பாது துன்பந் தன்னை
    இயல்பென்னும் பெரியோர்தம் இதழ்க்க டையில்
என்றைக்கும் புன்முறுவல் குடியி ருக்கும்;
    எழில்கூட்டும்; ஒளிர்சேர்க்கும்; துன்பம் போக்கும் !
வன்பித்தர் தமதுளத்தில் முறுவல் என்றும்
    வாழாது; பேய்ச்சிரிப்பே ஆட்சி கொள்ளும் !
அன்பைத்தம் முளங்கொண்டு வாழ்வோர் கட்கே
    அருகிருந்து ஒளிசெய்வாள் முறுவற் பெண்ணாள் !

அன்னையவள் இயற்கைதரும் எழிலைக் காணின்
    அருங்கவிஞன் மகிழ்ந்திடுவான் அவனு ளத்தில்
மின்னலெனப் புன்முறுவல் தோன்றும்; உண்மை
    மேலான கருத்துக்கள் பூக்கும் ! ஏட்டில்
கன்னலென வோர்கவிதை வடிவெ டுக்கும்
    காலத்தால் மறையாமல் நிமிர்ந்தே நின்று
பின்னரதைப் படிப்போர்தம் உள்ளத் துள்ளே
    பேரொளிசெய் முறுவலினைத் தோன்றச் செய்யும் !

உயிருக்கும் உடலுக்கும் உவகை யூட்டும்
    உயர்பொருளாய் புன்முறுவல் வாழி ! வாழி !!
துயர்போக்கி யயர்வொழித்தே உள்ளந் தன்னில்
    தூயன்பின் ஒளியேற்றும் முறுவல் வாழி
கயலொக்கும் விழிகொண்ட நங்கை யர்தம்
    கடையிதழில் நிலைத்தென்றும் அன்பைப் பாய்ச்சிச்
செயலாற்றும் புன்முறுவல் வாழி நன்றே !
    செகத்துள்ளோர் உள்ளத்துள் நிறைக இன்றே.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 18-3-'61 | இதழ் 39

தர்மம் சரணம் கச்சாமி!

ஆடவர் களம் புகுந்தனர்!

இளைஞர் களம் புகுந்தனர்!

பள்ளிச் சிருர் களம் புகுந்தனர்!

தாய்மார்கள் களம் புகுந்தனர்!

பிறர் முன் முகந்திறவா மலர்முக மங்கையர் அனைவரும் களம் புகுந்தனர்!

தமிழர் குலமே களத்தில் நிற்கிறது!

போலீசார் வந்தனர், புரட்டிப் புரட்டி உதைத்தனர்!

தெருவில் நாயை அடிப்பதுபோல் அடித்து, நாயை இழுப்பதுபோல் இழுத்தனர்!

இராணுவம் வந்தது! களத்தில் அணிவகுத்து நின்றது!

குண்டுகள் போட்டுக் கெட்டித்த துப்பாக்கிகள் வந்தன!

துப்பாக்கியின் முனையில் ஒளிவீசும் வாள் பொருத்தப்பட்டது!

படைத்தளபதி வந்தார்! படைவீரர் அனைவரும் கெட்டித்த துப்பாக்கிகளை ஏந்தியபடி அணி வகுத்து நடந்து காட்டும்படி கட்டளையிட்டார்!

மூன்ரும் உலகயுத்தம் மூண்டுவிட்டதோ என்று கேட்கத் தோன்றும்.

உலகயுத்தம் அல்ல—ஒருநாட்டுக்கும் மற்ருெரு நாட்டுக்கும் இடையே மூண்ட யுத்தம் கூட அல்ல!

ஒரே ஆட்சியில்-ஜனநாயகப் பார்லிமெண்டரி ஆட்சியில்-நியாயமான உரிமை கோரி-அறமே ஆயுதமாக-நீதியே துணையாக-"உரிமைகொடு அல்லது உயிரை எடு" என்று. வெம்பிக்கிளம்பிய தாய்மார்களை, பச்சிளங் குழந்தைகளை, பள்ளிச்சிருர்களை, 'பர்தா' முறைவழுவாப் பத்தினிமார்களை. தமிழ்க் குலத்தை அடக்கி ஒடுக்கவே துப்பாக்கி-போலீஸ்-இராணுவம் அத்தனையும்! வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

இந்த அற்புதமான வீரவேடிக்கை நடத்துபவர் யார்? எங்கே?

உலகுக்கே உயர்தனிச் செந்நெறி வழங்கிய உரவோன். கருணைப் பெருங் கடல். அன்பின் வழியது உயிர்நிலை என்று. அறம் வகுத்த அருளாளன். அன்பே உருவாய், அருளே உயிராய். அகிலத்தைத் திருத்த வந்த அண்ணல். பகவான் புத்தன்.

அந்த அறவாழி அந்தணனின் அடிச்சுவட்டில் ஒழுகுவதாக,-புத்தம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி! என்று, வாய் முழக்கம் செய்துவிட்டுக் குருதிபடிந்த கைகளுடன் உலவும், சிங்களப் பெருமக்கள், இலங்கைத் திருநாட்டில் நடத்தும் வீரகேளிக்கைதான் மேலே கண்டவை.

அறப்போர் நடத்தும் அருந்தமிழ் மக்களின் கோரிக்கைதான் என்ன?

கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியினர் நாங்கள்! முடிசூட்டிஉலகாண்ட மூத்தபரம்பரையில் வந்தோர்நாங்கள்! எங்களது பழம் பெரும் நாட்டின் பகுதியே இலங்கை வளநாடு! நேற்று முளைத்த சிங்களவர்க்கு இடமில்லை இங்கே! என்று, போர்முரசு கொட்டினரோ? இல்லை! இல்லை!

இலங்கை, பழம் பெரும் தமிழ்நாட்டின் பகுதி என்பது, இங்குள்ள தமிழ்ப் பெருமக்கள் பலருக்கே மறந்து போன உண்மை! எனவே அப்படி முழக்கமிட எவருக்கு நெஞ்சுரம் வரும்? போலி உறவும், பொய் நட்பும் கொண்டாடி, மதியாதார் வாசலில் மதிமயங்கி நின்று, மிதிப்பாரின் காலடியில் வீழ்ந்து வழிபட்டு, வீர வாழ்வை வீழ்த்தி-மான வாழ்வை வதைத்தொழித்து, வீண் வாழ்வு வாழ விரும்புவோர் மலிந்து கிடக்கும்போது, அதுதானேமிஞ்சும்! உண்மையையும் உரிமையையும் முன்னிருத்தி வாழ்ந்தால் வணங்காத வாழ்வு! வீழ்ந்தால் பிணமாகும் சாவு! என்று, மான மறம் கூறி நிற்போர் எத்தனை பேர்? எடுத்துக் காட்டாகச் சிலர் இருப்பர்!

இன்றுள்ள நிலைமைக்கேற்றபடி இலங்கை மக்களும் ஒடுங்கிவிட்டனர், முதலில் அவர் தம் தோளுக்குத் துணையாக நிற்க வேண்டிய தமிழகத் தமிழரை உதைத்து விரட்ட ஒருப்பட்டிருந்தனர்.

இன்று, அவர்களது தோள் துணையை, வலிமையைக் குறைத்த பின்பு, இலங்கையில். தமிழுக்கே இடமில்லை என்கின்றனர் சிங்களர்! தமிழரின் கோரிக்கைகளோ மிக மிக அற்பம்!

தனித் தமிழ்நாடு கோரவில்லை!

தமிழகத்தில் இணைந்துவிடப் போகிரேம் என்று முழங்கவில்லை!

இலங்கையில் சமஷ்டி சர்க்காரும் சுயநிர்ணய உரிமையும் கோரவில்லை!

அவர்கள் கோருவதெல்லாம் சிங்களத்திற்கு சமமான அரசாதிக்க உரிமை தமிழுக்கும் இருக்க வேண்டும் என்பதுதான்.

நியாய புத்தி உள்ள எவனும் இது ஓர் பெரிய கோரிக்கை என்று கூற முடியாது.

ஆனுல். இலங்கை ஏகாதிபத்திய வெறியர்களுக்கு இது அநியாயமாகத் தோன்றுகிறது. சிங்கள வெறியர் கே. எம். பி இராசரத்னு தமிழர்களை நசுக்கப் படை திரட்டுவாராம்!

இலண்டனில் ஓரிடத்தில் இலங்கை முதல் அமைச்சர் சிரிமாபண்டா சொல்லி இருக்கிருர்; தமிழை நியாயமான அளவுக்கு கையாளுவோம். என்று இது பட்டும் படாமலும், தீர்க்கமும் தெளிவும்இல்லாமலும். சொன்னசொல் என்றே நாம் கருதுகிரேம், 'நியாயமான அளவுக்கு" என்பதன் உட்பொருள் என்ன? 30 இலட்சம் தமிழர்கள் 60 இலட்சம் சிங்களவர் ஆகவே, அரசாங்க ஆவணங்களில் 60 சதவீதம் சிங்களம் 30 சதவீதம் தமிழ் 10 சதவீதம் ஆங்கிலமோ ஏதோ ஒன்ருே கலந்து எழுதப்படும் என்பதா? என்ன அருத்தம்?

இது எவ்வளவு பொறுப்பற்ற வார்த்தை? உண்மையில் சிரிமாவுக்கு பொறுப்பும் நியாய புத்தியும் இருந்தால், இலங்கை அரசாங்க மொழியாக-தேசிய மொழியாக-சிங்களம்போலவே தமிழும் இருக்கும் என்றல்லவா கூற வேண்டும்! அப்படிக் கூறவில்லை அவர்!

1949-50 ஆண்டுகளில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் 3 மொழிகளும் அரசாங்க மொழியாக இருக்கவில்லையா? அதுபோலவே தொடர்ந்து இருந்தால் என்ன?

தமிழ் மக்களுடைய அரசாங்க விண்ணப்பங்களுக்கு மறுமொழி அனுப்பினுல் சிங்களத்தில் அனுப்புவதும்: அரசாங்கச் செய்திகளை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டு, தமிழை அடியோடு புறக்கணிப்பதும்; தமிழர் வாழும் பகுதியிலுள்ள உள்ளாட்சி மன்றங்களில் கூட தமிழ் புறக்கணிக்கப்படுவதும் எதனுல்? தேசிய இனங்களை சிதறடித்து, தேசிய உணர்ச்சிகளைக்கொன்று. ஏகாதிபத்திய ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்கிற தீய எண்ணம் தவிர காரணம் என்ன இருக்க முடியும்?

இந்த ஏகாதிபத்திய வெறிநோய் இலங்கையில் முளைத்ததல்ல என்பது மாத்திரம் நிச்சயம்!

ஏனென்ருல் இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சிமறைந்த பிறகு, நீண்டநாள் வரை மொழி சம்பந்தமான தகராறு ஏதும் தோன்றவில்லை! தமிழை - தமிழரைப் புறக்கணிக்கும் எண்ணம் சிங்களவருக்கு இருந்த தில்லை!

இந்தியாவில் இந்தி ஏகாதிபத்திய வெறியர்கள், கட்டுப்பாடாக "இந்தியை ஆட்சிபீடம் ஏற்றியே தீருவோம்" என்று, கிளம்பியதைக் கண்ட பிறகுதான் இலங்கையிலும் புருஷோத்தம தாஸ் தாண்டன்களும், இராசேந்திரப் பிரசாத்துக்களும், பந்துக்களும். முளைத்தார்கள்.

ஆகவே, இங்குள்ள தாண்டன்களும் பந்துக்களும், பாபுக்களும், தலை சாய்ந்து போனுல்தான், அங்குள்ளவர்களும் தலை சாய்வார்கள்.

அதற்கிடையில் செய்யப்படும் எத்தகைய பரிகாரமும், தலையிடிக்கு தலையணையை மாற்றி வைக்கும் சிகிச்சையாகத்தான் இருக்கும்.

ஆனுல், அதற்காக இலங்கையில் அறப்போர் தொடங்கியவர்கள் அவல எண்ணம் கொள்ள வேண்டியதில்லை, பிரான்சு ஆதிக்கத்தை எதிர்த்து அல்ஜீரிய மக்கள் 2 இலட்சம் பேர் உயிரை விட்டிருக்கிருர்கள். உரிமையிழந்து உயிரோடு இருப்பது ஒரு வாழ்வா? தேவையில்லை! காலம் என்றுமே சிங்களத்தார்க்கும் இந்திக்காரருக்குமாக இருந்து விடாது.

சிங்களத் தகராறில் நேரு தலையிடவேண்டும் என்று இங்குள்ள சிலர் கூறுகிருர்கள். எவ்வளவு பேதமை!

திருடனிடம் திருடாதே என்று சொல்ல திருடனின் கூட்டாளியே வருவதுண்டா?

இங்கே பண்டிதர் செய்கிற அநீதியைத்தானே அங்கே பண்டா செய்கிருர்? பண்டிதர்-பண்டா இதுதான் வித்தியாசம்! செயலில் எந்த வித்தியாசமும் இல்லை!

இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு ஒன்று கூறுவோம். மனங்கலங்காமல் அறம் வழுவாமல் போரைத் தொடர்ந்து நடத்துங்கள். என்றைக்கிருந்தாலும் தமிழகம் உங்களுக்கு தோள் கொடுக்கும். என்றைக்கிருந்தாலும் அறம் வெல்லும் தீயவர்கள் தீயவற்றை அறுவடை செய்வார்கள்-அனுபவிப்பார்கள்.

எம். எஸ். இராமசாமி

வெண்பாப் போட்டி 16.

★

ஈற்றடி

தென்னிலங்கை மூட்டிவரும் தீ

இறுதி நாள் 1-4-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6

அவளே வென்றாள்!

உடுமலை-பண்ணன்

இளமை பூரிக்கும் இனிய தோற்றம். அழகு தவழும் உருவம்; ஆண்மைத் திறன் விளங்கும் திண்தோள்; பரந்த மார்புபார்ப்போரைக் கவரும். ஒளிவீசும் கண்கள்; அரும்புமீசை இத்தகைய கொஞ்சிடும் எழில் மிஞ்சி நிற்கக் குதிரைமீதமர்ந்து வந்தான் ஒருகாளை.

விரிந்த மணற்பரப்புடைய நெய்தல் நிலத்தில் பரிமா விரைந்து பாய்ந்து வந்தது. நெடுந்தூரப் பயணமும் காலை வெய்யிலும் இருவருக்கும் ஓய்வை வற்புறுத்தின. களைப்பு மேலீட்டால் எதிர்ப்பட்ட புன்னைமரச் சோலையில் ஓய்வு கொள்ளக் கருதினான். குதிரையை நிறுத்தி, இறங்கிச் சோலைக்குள் புகுந்தான்.

சற்று நேரம் கழிந்ததும் கடிவாளம் தொட்ட கையோடு நடந்தான். இடையில் சோலைவழியே செல்லும் பாதையை நெருங்கும் போது வெண்கலச் சிறுகலங்கள் உருளுவதைப் போலச் சிந்திய சிரிப் பொலியோடு அழகு மகளிர் கூட்டமொன்று கடலை நோக்கி ஓடிவருவதைக் கண்டான். அக் கட்டிளங்காளை பாதையை அடைவதற்கும், அவர்கள் குறுக்கிடுவதற்கும் சரியாக இருந்தது. அவனும் அவர்களும் எதிர்ப்பட்டனர்.

இவனோ தனியொருவன்; புதியவன்; பருவத்துப் பொலிவாளன். அவர்களோ பலர்; பளிங்குச் சிலைபோலப் பருவ எழில் பொழியத் துடுக்குச் செயல் குறையாப் பூவையர்; செம்பவள வாயிதழார் சமயத்தைச் சரியாகப் பயன் படுத்தினர்.

கேலி மொழியாலும் குறும்பு நகைப்பாலும் அவனை மூழ்கடிக்கத் தொடங்கினர். நகைச் சொற்கணைகளுக்கு முன்னே நம்பி திண்டாடினான். முகத்தில் மீண்டும் வியர்வை அரும்பியது. எல்லோரும் தன்னைக் கடந்து போனதும் சினம் பொங்க அவர்களை நோக்கினான்.

அதே வேகத்தில் குதிரை மீது பாய்ந்தேறத் தயாரானான். பின்னால் இருவர் ஓடிவருவதைக் கண்டான். இவர்களும் முன்னர் ஏகிய கூட்டத்தைச் சேர்ந்தவர்தாம் என்பதைப் புரிந்து கொண்டான்.

அப்பொழுதும் ஆறாத சினத்தில் அவன் விழிகள் தோய்ந்திருந்தன. முன்னே ஓடிவந்தவளது பார்வை இளைஞனின் சிவந்த விழிவீச்சில் மோதியது. அவனுடைய பார்வை வேகத்தைத் தாங்கும் வலிவற்ற அவளே, ஏதோ காலில் பட்டுவிட்டதாகக் கீழே குனிந்தாள், பின்னால் வந்தவள் 'என்னடீ அது' எனக் கேட்டவாறே காலடியில் அமர்ந்து செம்பஞ்சுக்குழம்பு தோய்ந்த சிறு மெல்லடியைத் தன் செங்காந்தள் மென்விரலால் வருடினாள்.

காலிற் பட்டவள் நிமிர்ந்து நின்று மீண்டும் தனது ஓரக்குறுவிழிப் பார்வையினால் பரிமாவின் அருகிருந்த பீடமைந்த நோக்கினனின் அழகை உண்ணத் தலைப்பட்டாள்.

'காலில் எதையுமே காணோமே?'

காலடியில் அமர்ந்து துழாவிய தோழி கேட்டாள்.

'நெஞ்சில் தைத்ததை நீ எப்படியடி பார்க்க முடியும்?'

'பேதையின் நெஞ்சில் தைக்கும்படி பாய்ச்சிய இரக்க மற்ற கொடியவன் யார்?'

கள்ளமறியாதகாளை இப்படிக்கேட்டவாறே சுற்று முற்றும் தேடினான்.

'குற்றம் புரிந்தவரே குற்றவாளியைத் தேடினால் எங்கே அகப்படுவான்?'

அவன் திடுக்கிட்டான்.

இந்த உரையாடலைக் கேட்ட தோழி எழுந்தாள் குறும்புமொழிகள் பரிமாறப் படுவதைப் புரியாமல் இருக்க அவள் பெரும்பேதையல்லவே!

'காலில் கடுநஞ்சு முள் தைத்தாலும் அதைமாற்றி ஆற்றிக் கொள்ள முடியும். நெஞ்சில் கள்ளப் பார்வை மென்மலர் விழுந்தால் மாற்றமும் கிடைக்காது மருந்தும் அந்நோயை நீக்காது. வாடி போவோம்!'

விளக்கத்தோடு எச்சரிக்கையும் தந்து, வளைக்கரந்தொட்டு வண்ண மயிலாளை வலிய இழுத்துச் சென்றான்.

தோழியின் தெளிந்த முன்னறிவு கொடுமையான குறுக்கீடாக அவனை எண்ண வைத்தது.

அரும்பிய ஆசைக்குத் தடுப்பு நேர்ந்த துயரம் விழியில் தேங்க திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் தோகை மயிலாள் மணல் வழியில் தடுமாறி நடை பயின்றாள்.

தொகையாகப் பகை சூழ்ந்த வேளையிலும் நகையாடி எதிர்நின்று வீழ்த்தும் நெஞ்சுரம் பெற்ற நல்லவன் மனதில் பிஞ்சு மனவஞ்சியின் பேரெழில் திருவுருவம் நிழலாடி நிலைமாற்றத் தொடங்கியது. ஆடிய உள்ளத்தோடு அசையாது நின்றிருந்தான். நகர் நோக்கிப் போவதா, அன்றி நங்கை செல்லும் இடம் நோக்கித் தொடருவதா, என்கிற போராட்டத்தைக் கனைத்த குதிரையின் ஒலிகலைத்தது. அப்போதைக்குக் கடமை அழைத்தது. காதலை உள்ளத்தின் ஒரு பகுதியில் அடைவைத்தபடியே ஊர் சென்றான்.

கண்களவு கொண்ட சிறுநோக்கம் இருவருக்கும் காதலிற் செம்பாகத்திற்கும் மேலாகக் கனிந்தது.

மீண்டும் காண முயன்றனர். வாய்ப்புக் கிடைத்தும் வாய்ச்சொல் பரிமாறவும் வழியில்லாமல் இடையூறுகள் தடையாக நின்றன. வாய் பேசாவிடினும் பேசாத நெஞ்சங்கள் ஒலிக்காத விழிவழியே எண்ணத்தைத் தந்தும் பெற்றும் தமக்குள் தூய அன்பினை வளமாக வளர்த்துக் கொண்டன.

அவளோ துயரில் ஆழ்ந்தாள். தாழாத மனப்போராட்டத்தால் துயிலாத இரவு களையே துணையாகக் கழிக்க நேர்ந்தது. தொடுத்த மலர்க்கொத்தையும் துறந்தது கார் குழல். பஞ்சணை முட்படுக்கையாயிற்று. பழகிய கிளியும் பக்கத்திலிருக்கப் பிடிக்கவில்லை. தோய்ந்துவரும் தென்றலும் தண்மை பொழி நிலவும் வெம்மைக்கு வித்தூன்றின. மாலைவேளை வதைக்கும் பெருநோயாக வந்து வந்து போயிற்று.

அவனையும் இயற்கை பழிவாங்கத் தவறவில்லை. ஆற்றும் விழியும், மாற்றும் மருந்தும், மான்விழியின் குளிர் பார்வையும் குழைந்து தழுவும் இன்பப் பிணைப்பும்தான் என்பதை மனம் தெளிவாக உணர்த்தியது.

அலமரும் தலைவியின் மனநோயைக் காணப் பொறாத தோழி, தானே! துணையாக முன்வந்தாள். பெண்ணினத்திற்கே முதன்மையாக வைத்திருப்பதைத் தன் செயல் முறையில் காட்ட முற்பட்டாள்.

நீடு பசியோடு நிலை மறந்து கிடந்த காளை. ஏக்கத்தின் கொடிய பிடிப்பில் எதையும் வெறுத்து நடமாடிய அந்த எழில் சோர்ந்த செல்வன்; தளர்ச்சி மலிய துன்பம் நெளிய மனச்சுமையோடு அரற்றியிருந்த அட்டலேறு கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன் படுத்தத் துவங்கினான். ஆசை வெள்ளத்தில் அவளைக் குளிப்பாட்டினான். அவளது அன்பு வெள்ளத்தில் தன்னை மறந்து மூழ்கினான். இன்பத் தேன் குடத்தில் இருவரும் ஒருவராகப் பிணைந்து வீழ்ந்து மெய்மறந்தனர். இதய அணைப்பில் நாள் தோறும் உறங்கி மயங்கினர்

கூடல் தொடர்ந்தது. களிப்புப் படர்ந்தது. இனிமை மழை பொழிந்தது இன்பப் புதுப்புனல் எழிலாகப் பாய்ந்தது.

ஒரு நாள் இருவரையும் சந்தித்தது. அதுதனது தாங்கமுடியாத பொறாமையைக் கொட்டித் தீர்க்கத் துணிந்தது.

ஊடல் இருநாட்கள் அந்த இளஞ் சிட்டுகளைப் பிரித்துவைத்தது. அந்தக் கணத்திலேயே அவனால் தாங்க முடியவில்லையென்றால் அவளால் இரு நாட்களுக்கு மேல் எப்படித் தாங்கியிருக்க முடியும்?

வலியத் தோழியிடம் கூறினாள். நீயே வரவழைத்த வம்புக்கு நானென்ன செய்ய? எனத்தட்டிக் கழித்தாள் தோழி. தவறை உணர்ந்தேன்; இரு நாட்களாக நான் பிரிவுத் துயரென்னும் தண்டனை அடைந்து திருந்திவிட்டேன், இனியும் அந்தத் தனிமைக் கொடுமையைத் தாங்கமுடியாது' என்று கெஞ்சினாள்.

அவளது ஆற்றாமைக்கு இரங்கிய தோழி காதலனைக் காணச் சென்றாள். வாட்டம் தீர்க்க வலிய அழைப்பு வந்ததைத் தட்டிக் கழிக்க அவனென்றும் இன இன்ப உணர்ச்சி தடைப்பட்டுப் போன உள்ளத்தினன் அல்லவே!

அழைப்பு முடியுமுன்னே ஆவல் ததும்பப் பயணமானான். அவனது அவசரத்தைத் தடுத்து, வேலையையும் குறியிடத்தையும் கூறி விடை பெற்றாள் தூதாக வந்த தோழி.

அளவிறந்த ஆசை மனப் பொய்கையில் ஊற்றாய்ப் பெருக்கெடுத்தும் அறிவு அதிலே மூழ்கி மறையவில்லை. எனவே ஊடல் தோற்றுவித்து இரு நாட்களாகத் தன்னை வதைத்த அன்புக் காதலியைத் தன் கண்முன்னால் துயரில் ஆழ்த்திப் பார்க்கவேண்டுமென முடிவெடுத்தான்.

மாலைவேளை தோழிகூறிச் சென்ற குறியிடத்தில் உள்ளத்தின் உரிமைக் காரியின் வரவுக்குக் காத்திருந்தான். அவளும் தோழியும் விரைந்து வருவதைக் கண்டான். மெல்லியலாளின் கண்விழியில் ஆர்வம் ததும்பிப் பொழிவது அவனுக்குத் தெரிந்தது.

சட்டென புன்னைமரம் ஒன்றின்புறத்தில் மறைந்து நின்றான். குறியிடம் அடைந்த தலைவி, தலைவனை அங்கு காணாமை கண்டு வருந்தித் தோழியைச் சினமுடன் பார்த்தாள் தலைவிக்கு ஏமாற்றம் நேர்ந்துவிட்டதே எனும் கவலை தோய்ந்த முகத்தோடு—ஆனால் அவனது வருகையின் உறுதிப்பாட்டில் குறையாது அங்கு மிங்கும் தேடினாள்.

புன்னைக்குப் பின்புறம் அவன் பதுங்கி இருந்ததைப் பார்த்துவிட்டாள். அதைத் தலைவிக்குக் கூறாமல் ஒரு வேடிக்கை காட்ட எண்ணினாள். தலைவியை அருகே அழைத்தாள்.

'எனது அன்புத் தலைவியே! நான் அவரை நேரிற்கண்டு உனது நிலைமையை எடுத்துச் சொன்னேன், நீ அவர் மீது கொண்டுள்ள களங்கமற்ற அன்பையும் காணாத பொழுதைக் கழிக்கப் படும்துயரையும் எடுத்துரைத்தேன். அவரும் அதனைப் புரிந்து நான் குறித்த இடத்தில் உனது வருகைக்கு காத்திருப்பதாக உறுதி தந்தார், இந்த இருள் நிறைந்தது போலக் குளிர்ச்சி பொருந்திய வளமான நிழல் சூழ்ந்துள்ள, மணல் பரந்து கிடக்கும் பெரிய கிளைகளையுடைய அழகிய பூக்கள் நிறைந்த புன்னை மரச்சோலைக்கு இன்னும் வந்தாரில்லை. எதிர்பார்த்து வந்து காத்திருக்கும் நமக்கு ஏமாற்றமே மிஞ்சும் போலிருக்கிறது.

இனியும் காத்திருப்பது நம்மால் இயலாது. அவர் இனிமேல் வந்தாலும் நமக்கும் அவருக்கும் மகிழ்ச்சி பிறக்காது என்று தோழி கூறினாள்.

தலைவி நிலைகுலைந்தாள். ஆசையோடு வந்தும், அவரைக் காணாது திரும்ப நேர்ந்ததே என்று கவலைப் பட்டாள்,

மறைந்திருந்த அவனுக்கோ மனதில் துன்பம் அரும்பியது. விளையாட்டு வினையாக முடியுமோ என அஞ்சினான். அந்த அச்சம் மேலும் பெருகித் துயர் மலியச் செய்வதாக அமைந்திருந்தன தோழி மேலும் கூறிய சொற்கள்.

தலைவி: ஏண்டி தோழி நாம் இங்கே இனியும் காத்திருக்கக்கூடாது?

தோழி: (கண் சிமிட்டியபடி) அதோ கடலைப் பார்! மீன் வேட்டையாடக் கலமேறிக் கடல் மீது சென்ற நம் தந்தையர் வருவது உனக்குத் தெரியவில்லை?

தலைவி: (எதுவுமே புரியாமல்) ஆமாம் அதோ கரையை நெருங்கி அவர்களது கலங்கள் வருகின்றன.

தோழி: பிறகென்ன? அவர்கள் கரை சேர்ந்த பின்னும் நீ இங்கே காதல் விளையாட்டில் ஈடுபட்டுக் களித்திருக்க முடியுமா?

தலைவன் இதைக் கேட்டதும் அசைந்து போனான். கை பிசைந்தான். அவர்களது தந்தையர் கரை சேருமுன் ஒருமுறை அவளருகில் ஒரு கணமேனும் இருக்க வேண்டுமென்ற ஆர்வத்தால் மறைவிலிருந்து ஓடி வந்தான்.

உண்மையாகவே உன் தந்தையர் வருகிறார்களா?' அவனுடைய கேள்வியில் ஆர்வப் படபடப்பு நிறைந்திருந்தது.

தோழி, களுக்கெனச்சிரிப்பைச் சிந்தி மெல்ல நகர்ந்தாள்.

தலைவி எதையோ பேச வாயெடுத்தாள். இன்ப உணர்ச்சி நாவினைத் தடுத்தது. ஏமாற்றவே அப்படிப் பேசினர் என்பதைப் புரிந்தான்.

ஊடலை மறந்து அவன் வலியச் சென்று அவள் பட்டுத் தோளினைப் பற்றித் தழுவினான். பிரிவுக்குப் பின் நேர்ந்த அந்தப்பெருவாய்ப்பில் தன்னை மறந்து அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

சற்று தொலைவிலிருந்து தோழி மெல்லப் பாடினாள்:

'இருள் திணிந்தன்ன
ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக்குவித்தன்ன
வெண்மணல் ஒருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப்
பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார் வரூஉம்
பன்மீன் வேட்டத்து
என்னையர் திமிலே.

(குறுந்-123)

பாடல் இசை அவனது செவியில் பாயவும் தனது தோல்வியையும் மறந்து, அவளது வெற்றிக்குப் பரிசாக கொவ்வைக்கனி யிதழில் முத்தங்களைக் கொட்டினான்.

பிரபல (இந்திப்) பேராசிரியர் **ராகுல சாங்கிருத்தியாயன்** எழுதிய **வால்காவிலிருந்து கங்கைவரை** எனும் புகழ் வாய்ந்த புத்தகம், அவரது ஆழ்ந்த ஆராய்ச்சிச் செறிவையும், கூர்ந்த அறிவுத் திறனையும் பறைசாற்றும் ஓர் பயனுள்ள படைப்பாகும். சரித்திரத் தொடர்பும், தத்துவச் சிறப்பும், கற்பனைக் கலப்பும் நிறைந்து விரவிக் காணப்படும் இந்நூலில், ஆசிரியர் சாங்கிருத்தியாயன், தத்துவ ரீதியாகவும், ஆதார வழியாகவும், தான் ஆராய்ந்தும் யூகித்தும் கண்ட உண்மைகளையும் கொள்கைகளையும் நிலைநாட்ட முயன்றிருக்கிறார். கி. மு. 6000 ஆண்டுகளுக்குமுன், **வால்கா** நதிக்கரையில் ஆடை கட்டுவதையே அறியாது, அன்னை யார்? மனைவி யார்? என்ற உணர்வையும் உறவையும் தெரியாது, காட்டு வாழ்க்கை நடாத்திய கற்கால மனிதனின் ஆரம்ப காலத்திலிருந்து-கி.பி. இருபதாம் நூற்றாண்டுவரை, மனிதன் முதிர்ந்து வளர்ந்து முகிழ்ந்த நாகரீகத்தை-சரிதம் மறவாத மன்னர்களையும் கவிஞர்களையும், மாவீரர்களையும் ராஜதந்திரிகளையும், மையமாகக் கொண்டு கதையாகக் காட்டி 'விளையாடி'யிருக்கிறார்.

"இந்த இந்திப் புத்தகத்திற்கு ஈடான ஒரு புத்தகம், இந்திய மொழிகள் எதிலும் இதுவரைத் தோன்றவில்லை" என்று மராட்டியப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவரால் அளவு கடந்து பாராட்டப் படுமளவுக்குச் சுவையான பல செய்திகளடங்கிய இந்நூல், வடநாட்டுப் பண்டிதர் பலரின் காரசாரமான தாக்குதலுக்கும், எதிர்ப்புக்கும், விமர்சனத்திற்கும் உள்ளாகியிருக்கிறது. கீழ்த்திசை மொழிகளில் பெரும்புலமை பெற்று லெனின் கிராடு பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய அறிவுக் கடலான பேராசிரியர் சாங்கிருத்தியாயன், இந்நூலில், இந்தியாவில் தோன்றிய **முதல் நாடகம்** "ஊர்வசி வியோகம்" என்றும், இதை இயற்றியவன் இற்றைக்குச் சுமார் 1500 ஆண்டுகட்குமுன் அயோத்தியில் வாழ்ந்த **அஷ்வகோஷ்** என்ற கவிஞனே என்றும், இவன் நாடகக் கலையைக் கிரேக்கர்களிடமிருந்தே கற்றுக்கொண்டான் என்றும், கிரேக்கக் கலையின் ஞாபகார்த்தமாகவே நாடகத்தின் **திரைச்சீலைக்கு** "யவனிகா" (யவன்-கிரேக்கர்) என்ற பெயர் ஏற்பட்டதென்றும் அழுத்தந் திருந்தமாகச் சொல்கிறார்.

★ ★ ★

பண்டையத் தமிழர், நாடக மேடையில் உபயோகித்து வந்த திரைச்சீலைக்கு "**எழினி**" என்று பெயரிட்டு அழைத்தனர். **எழினி** என்ற சொல்லை உச்சரிக்க இயலாது, வட மொழியாளர் 'யவனிகா' என்று திரித்துக் கூறுகின்றனர் என்பதே நம்மொழியாராய்ச்சி வல்லுனரின் முடிவு.

கிரேக்க நாட்டின் ஒரு பகுதிக்கு, **அயோனியா** (Ionia) என்று பெயர். அயோனிய கிரேக்கருக்கு அயோனியர் என்று பெயர். அயோனியர், தமிழில் **யவனர்** என்று அழைக்கப்பட்டனர். கி. பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இப்பலஸ் (Hipplaus) என்ற மாலுமி அரபிக் கடலின் நடுவே பிரயாணம் செய்து, சேர நாட்டுத் துறைமுகத்திற்கு வந்தான் என்று வரலாறு சொல்கிறது. கி பி. முதல் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் தொடங்கிய யவனர்களின் வணிகம், கி. பி. மூன்றும் நூற்றாண்டோடு முடிந்திருக்கிறது. இக்காலத்திற்கு முந்தி கிரேக்க நாடக மேடைகளில் திரைச்சீலை உபயோகப்படுத்தியதாக செய்திகளில்லை. ஆகவே, ஆசிரியர் சாங்கிருத்தியாயன் காட்டியிருக்கும் அஷ்வகோஷும், அவனது ஆருயிர்க் காதலி பிரபாவும், அவர் கருத்துக்கு மாருக இங்கே உலவுகின்றனர்.

காட்சி 1

சாகேதத்தின் மலர் வனம்.

அயோத்தி என்று பெயர் மாறிவிட்ட சாகேத நகரம், வசந்த கால மாலை நேர மஞ்சள் வெயிலால் மினு மினுத்துக்கொண்டிருக்கிறது. நகரின் கடைகோடியில் 'கல கல'வென ராகம் போட்டு ஓடிக்கொண்டிருக்கும் சரயூ நதிக் கரையின் ஓரத்தில் இருந்த அந்த அழகான மலர்த்தோட்டத்திலுள்ள சின்னஞ் சிறிய செடிகள், கொத்துக் கொத்தாகப் பூத்துக் குலுங்கும் மாம்பூ மணத்தின் போதையால், தள்ளாடுவதுபோல் தலையசைத்துக் கொண்டிருக்கின்றன. மலர்வனத்தின் மையத்திலுள்ள குளத்தில், வெண்தாமரை மலர்களுக்கும் செந்தாமரைக் கொடிகளுக்கு மிடையே அன்னப்பறவைகள் காதல்விளையாட்டில் கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றன. குளக்கரையின் விளிம்பில் தலை வைத்தவண்ணம் வானத்தைப் பார்த்துக்கொண்டு படுத்திருக்கிறான்—அயோத்தி நகரையே தனது இசை ஆற்றலால் மயக்கத்தில் ஆழ்த்தும் இளங்கவிஞன் அஷ்வகோஷ். எப்போதும் அவன் கரங்களிலிருக்கும் மகரயாழ், இப்போது அவனுக்குச் சற்றுத் தூரத்தில் கிடக்கிறது. பொன்னிறக் கண்கள் மின்னும் வண்ண முகத்தில் சுருண்டுவிழும் செந்நிறக் கேசங்களைக் கையால் ஒதுக்கியபடி, ஊர்ந்து செல்லும் மேகங்களை உற்று நோக்கிக்கொண்டிருக்கிறான் அவன்.

அஷ்வகோஷ் : பால்போல் திரைந்து, பனிபோல் கரைந்து, நூல்போல் பிரிந்து செல்லும் வெண்மேகக் கும்பல்களே! இன்பமான வாழ்க்கையை-இனிமையான வகையிலே-அனுபவிக்கத் தெரியாது அலைந்து திரியும் அவசரக்கார மனிதர்களின் முட்டாள்தனமான பரபரப்பைப் பார்த்து நீங்கள் கூடவா கெட்டுவிட்டீர்கள்? என்ன வேலை வந்துவிட்டது உங்களுக்கு? எங்கே செல்கிறீங்கள் இவ்வளவு வேகத்தில்? கண்ணுக் கெட்டாத நீலவானத்தில், கைக்கெட்டாத நெடுந்தூரத்தில், கலைஞனின் கருத்துக் கெட்டாத புதிய சிற்பங்களை வித விதமாக உருவாக்கிக் காட்டும் உங்களை ஆவலோடு பார்த்து அதிசயத்துக் கொண்டிருக்கும்போதே இவ்வளவு வேகமாக மறைந்து விரைந்து செல்கிறீர்களே ஏன்? அழகான வார்த்தைகளோடு விளையாடி - அற்புதமான கவிகளைப் பாடும் என் வாயும், இனிமையான மகரயாழோடு உறவாடி-மென்மையான இசையைப் பொழியும் என் கையும், அலுத்துச் சலித்துச் சோர்ந்தே விட்டன. இசையும் கவியும் கசந்துவிட்டது எனக்கு. ஏங்கிக்கிடக்கும் இள உள்ளங்களைத் தடவிக் கொடுத்து கிளுகிளுக்கச் செய்யும் உணர்ச்சி நிரம்பிய காதல் கவிதைகளை எவ்வளவோ முயன்றும் என்னால் எழுதவே முடியவில்லை. எப்படி முடியும்? காதலில் ஆழ்ந்து மூழ்கி அனுபவித்துக் கிடந்தால் அல்லவா கவிதையிலும் நயம் இருக்கும், சுவை பிறக்கும், உணர்வு சுரக்கும். எனது கற்பனை நிற்கவே இல்லை; அதுவும் உங்களைப்போல குலைந்துவிடுகிறது, கலைந்து படுகிறது, என்ன செய்வேன் நான்? யாழைத் தடவும் சிறு விரல்கள்-எவளாவது ஒருத்தியின் இன்பந்தடவும் இடையைத் தடவி, உடலைத் தழுவி உதட்டை வருடக் குறுகுறுக்கின்றன.

பிரபா : த்ச்சூ-த்ச்சூ-த்ச்சூ!

அஷ்வ : (எழுந்து உட்கார்ந்து) யாரது? யாரெங்கே?

(இவ்வளவு நேரமும் செடிமறைவில் உட்கார்ந்து அஷ்வகோஷின் பேச்சை ரசித்துக் கொண்டிருக்கும்போதே தன்னை மறந்து 'சூள்' கொட்டிவிட்ட பிரபா, எழுந்து வெளியே வருகிறாள்)

பிரபா : மன்னிக்க வேண்டும் கவிஞரே...

அஷ்வ : என்ன! மன்னிப்பதா! யாரை!

பிரபா : என்னைத்தான்.

அஷ்வ : எதற்கு?

பிரபா : ஊர்ந்துகொண்டிருக்கும் மேகங்களிடம், உங்கள் உள்ளக் குறைகளைச் சொல்லி சோர்ந்துகொண்டிருந்த தங்கள் கவனத்தைக் கலைத்ததற்காக.

அஷ்வ : ஆமாம்-நீ இவ்வளவு நேரமும் இங்கேயா மறைந்திருந்தாய்?

பிரபா : ஆமாம்-ஒவ்வொரு நாளுந்தான் நான் இங்கே மறைந்திருக்கிறேன்.

அஷ்வ : தினமுமா நீ இங்கு வருகிறாய்?

(8-ம் பக்கம் பார்க்க)

அருப்பை கிழார்
கில்லாடி முத்தன் M.L.A.

—முன் இதழ்த் தொடர்ச்சி—

அவர்களுடைய அருமையான பழக்கங்களில் ஒன்றுன கட்சாராயம் குடிப்பதையும் கொஞ்சம்கொஞ்சமாக முத்துசாமி பழகிக் கொண்டான். இப்படியே இரண்டொரு ஆண்டுகள் ஓடி ஒழிந்தன.

அந்த சமயத்தில்தான் காங்கிரசின் கள்ளுக்கடை மறியல் நாடெங்கும் நடைபெற்றது.

உடும்புக் குடியிலிருந்த காங்கிரஸ் காரர்களும் கள்ளுக்கடை மறியலுக்கு தயாரானுர்கள்.

மற்ற ஊர்களில் கள்ளுக்கடையில் அமைதியாக நின்று மறியல் செய்த தொண்டர்கள் பலர் போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டு. கையொடிந்து, கால் ஒடிந்து வருடக் கணக்கில் தண்டனை பெற்று பெரிதும் துயரப் படுகிருர்கள் என்கிற செய்திகள் நாளேடுகளில் பெரிய பெரிய எழுத்துக்களில் வெளிவந்தன.

அதனுல் உடும்புக்குடி காங்கிரஸ் காரர்கள் பெரிதும் கிலியடைந்து விட்டார்கள். "கள்ளுக்கடை மறியலை உடும்புக் குடியைப் பொறுத்தமட்டில் நிறுத்திவிட்டால் என்ன" என்றெல்லாம் ஆலோசனை செய்தார்கள். முடிவில் "அப்படி நிறுத்திவிட்டால் கேவலம்" என்கிற எண்ணத்திஞல் இரண்டு பேரையாவது ஒரு நாளைக்கு மறியல் செய்ய அனுப்பி "உடும்புக் குடியின் பெயரைக் காப்பாற்ற வேண்டும்" என்று முடிவுசெய்தனர்.

அவர்கள் இத்தனை தூரம் தயங்குவதற்குக் காரணம் இருந்தது. மறியல் செய்யும்படி காங்கிரஸ் தலைமை ஆணையிட்டபோது, நான் நீ என்று 50 பேர்களுக்கு மேல் தொண்டர்படைக்கு பெயர் கொடுத்தார்கள்.

காஞ்சிபுரத்தில் 10 பேர் கால் ஒடிக்கப்பட்டார்கள் காரைக்குடியில் ஆறுபேர் கையொடிக்கப் பட்டார்கள் என்பன போன்ற செய்திகள் வர வர தொண்டர்கள் தகப்பனுர் தமையனுர் இவர்களின் தடை மூலமாக பின் வாங்கிக் கொண்டார்கள்.

எந்த நிலைமையிலும் பின்வாங்காமல் 6 தொண்டர்கள் மட்டுமே இருந்தனர். அவர்களில் 4 பேர் ஆதரவற்ற அநாதை இளைஞர்கள். மற்ருருவன் பள்ளி இறுதித் தேர்வில் கோட்டைவிட்டு மனம் உடைந்தவன். இன்னொருவன் மனைவி நடத்தை சரியில்லாததால் வீட்டைவிட்டு வெளியேறியவன்.

மொத்தத்தில் மறியலை ஒரு புனிதப் போர்' என்று நெஞ்சார உணர்ந்து கொண்டிருந்த தொண்டர் ஒருவருமில்லை.

உடும்புக்குடியில் 2 கடைகள் தான் இருந்தன. ஒன்றுக்கு 1-ம் நிர் கள்ளுக்கடை என்றும் இன்னென்றுக்கு 2 நிர் கள்ளுக்கடை என்றும் சொல்லப்படும். மறியல் நடத்த வேண்டிய நாளும் வந்தது. இரண்டிரண்டு பேராக மறியல் செய்யப்போவதென்றும் போகிற தொண்டர்கள் கையில் பெரிய கொடியேந்தி "வந்தே மாதரம் என்போம்-எங்கள் - மாநிலத் தாயை வணங்குவம் என்போம்" என்ற பாடலை இசைத்துச் செல்ல வேண்டும் என்றும் திட்டம் செய்யப்பட்டது.

முதலில் 2 தொண்டர்கள் 1-நிர் கள்ளுக்கடை வாசலுக்குப் போனுர்கள் உடனே போலீசார் அவர்களை தடியால் அடித்து போலீஸ் வானில் ஏற்றிக் கொண்டு போனுர்கள்.

2-வது 2 தொண்டர்கள் போனுர்கள். அவர்களை கடைவாசல்வரைக்கும் கூட போலீசார் விடவில்லை. வழியிலேயே அடித்துப் பிடித்துக்கொண்டு போயினர். மேலும் 2 பேர் தூரத்திலேயே கைது செய்யப்பட்டனர்.

இவையனைத்தும் பகல் 12 மணிக்குள்ளாகவே நடந்து முடிந்து விட்டன. மாலை 3 மணி வரை யாருமே வரவில்லை.

பொதுவாக எங்குமே குடிகாரர்கள் மாலையில்தான் கட்கடைகளை முற்றுகையிடுவார்கள். ஆதலால். உடும்புக்குடி கட்கடையில் பகல் 12 மணி வரை யாரும் வராதிருந்ததில் வியப்பொன்றுமில்லை.

ஆயினும், போலீசார் காலை 6 மணி முதலே கடைகளுக்கு முன்னுல் அணிவகுத்து நின்றனர். ஆணையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அவர்களுடையது. இரவு கள்ளுக்கடை மூடும் வரை காத்திருக்கவேண்டும். அதன்படி காத்துக்கொண்டிருந்தனர். போலீசாரின் கெடுபிடி காரணமாக கள்ளுக்கடைத் தெருவில் ஆள் நடமாட்டமே அற்றுப்போயிருந்தது.

★

முத்துசாமி வீட்டில் பகல் 3 மணி வரை சூதாட்டம் வெகு விமரிசையாக நடைபெற்றது. அன்றையத்தினம் முத்துசாமிக்கு மேசைக்காக மட்டும் ருபாய் பத்து கிடைத்தது. இதனுல், அவனுக்குண்டான மனமகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அவன் இந்த நளன் தருமன் தொழிலை ஆரம்பித்த பிறகு இவ்வளவு ருபாய் ஒருநாளும் கிடைத்ததில்லை.

ஆகையால் அன்று ஆட்டங்களை அத்துடன் நிறுத்திவிட்டு ஓய்வு பெறவும் உற்சாகம் கொள்ளவும் விரும்பினுன்.

பத்து நாட்களுக்கு முன்பே கள்ளுக்கடை மறியல் சம்பந்தமான பேச்சுக்கள் ஊர்முழுதும் பரபரப்பை உண்டாக்கி இருந்தன.

முத்துசாமியின் சூதாட்டக் கச்சேரியில் இதைப்பற்றிய வாக்கு வாதங்கள் தோன்ருமலிருக்க முடியுமா ?

அத்தகைய சந்தர்ப்பங்களில், நமது முத்துசாமி அதிகமான வாதப் பிரதி வாதங்களுக்கு இடம் வைப்பதில்லை. ஒரே வரியில் அவனுடைய அப்பிராயத்தை அடக்கிக் கூறிவிடுவான். அவன், அப்போது அடிக்கடி கூறி வந்த மணிமொழிக் குறள் இதுதான் :-

"அவனவன் பணத்தைக் கொண்டு குடிப்பான்; கூத்தியா வீட்டுக்குப் போவான்—எதுவும் செய்வான். காங்கிரசுக்காரனு குடிக்கிறவனுக்குப் பணம் கொடுக்கிருன் ? வெட்டிப்பயலுக !" என்று சொல்லி நிறுத்திவிடுவான். அதற்குமேல் அவனுக்கு எதுவும் சொல்லத் தோன்ருது. அன்றைக்கு மறியல் நாளல்லவா ? மேலே கண்ட மணிமொழியை நூறு தடவையாவது சொல்லி இருப்பான்.

இப்படி அவன் சொல்லிக் கொண்டாலும் உள்ளூற, இப்படி, தான் அடிக்கடி சொல்வது தவருக இருக்குமோ என்கிற ஐயமும் தோன்றும். ஆனுல், யாரிடத்திலும் தான் சொல்வது சரிதானு என்று கேட்க விரும்பவில்லை.

அன்று காலை முதல் மறியல்சம்பந்தமான நினைவுகள் அடிக்கடி தோன்றி முத்துசாமியின் உள்ளத்தில் ஓர் இனந்தெரியாத மனப்போராட்டத்தை உண்டாக்கி இருந்தது.

எனவே, சூதாட்டம் முடிந்ததும் நேராக கள்ளுக்கடைக்குப் போய் வேடிக்கை பார்க்க-உற்சாகம் ஊட்டிக் கொள்ள விரும்பினுன்.

சூதாட்ட நண்பர்களை எல்லாம் அனுப்பி விட்டு தான் மட்டும் தனியாக கள்ளுக்கடைக்குப் புறப்பட்டான். போலீசார், கள்ளுக்கடையிலிருந்து நாலாபக்கத்திலும், 100 கஜ தூரத்திற்குள் எவரையும் அனுவசியமாக அனுமதிக்கவில்லை.

கள்ளுக்கடை உரிமையாளர் காத்தான், தனது வாடிக்கைக் காரர் என்று, அத்தாட்சி செய்தால் மட்டுமே கடையை நெருங்க முடியும். அந்த அளவுக்குப் போலீசார் கெடுபிடி செய்து கொண்டிருந்தார்கள்.

வாடிக்கைக் காரர்களுக்கு அத்தாட்சி செய்து அழைப்பதற்காக காத்தான், அன்று முழுவதும் கடை வாசலிலேயே நின்று கொண்டிருந்தார். அவருக்கு 2 பக்கத்திலும் சுமார் 15 கஜ தூரத்திற்கொருவராக குண்டு போட்டுக் கெட்டித்த துப்பாக்கியை அதன் கைப்பிடி தரையில் ஊன்றிக் கொண்டு இருக்கும்படி முன்னுல் நிறுத்தி, இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு அணிவகுத்து நின்று கொண்டிருந்தனர் போலீசார்.

தெருவில் சார்ஜண்டு ஒருவரும், சர்க்கிள் ஒருவரும். முன்னும் பின்னுமாய் உலாத்திக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்குப் பக்கத்தில் 'போலீசு வான்' ஒன்று நின்று கொண்டிருந்தது. அவர்களுடைய தோளில் பொறிக்கப்பட்டிருந்த M.S.P. என்ற எழுத்துக்கள், அவர்களை மலபார் ஸ்பெஷல் போலீசு என்று விளம்பரம் செய்தது அவர்கள், இரைதேடி அலையும் புலிகளைப் போல் காணப்பட்டார்கள். அவர்களின் கெடுபிடி காரணமோ என்னவோ தெருவில் சுதந்திரமாகத் திரியும் பன்றி நாய் பூனைகூட, அன்றையத் தினம் நடமாடவில்லை, காகம் குருவிகள் கூட பறப்பதாகத் தெரியவில்லை.

அப்போது பகல் 3½ மணி இருக்கும். அந்த ஆள் நடமாட்டமில்லாத தெருவின் முனைக்கு ஆடி அசைந்து கொண்டு வந்து சேர்ந்தான், முத்துசாமி.

தெருக்கோடியில் அவன் தலை தெரிந்தவுடனே தெருவில் உலா நடத்திக் கொண்டிருந்த அதிகாரிகள்-அணிவகுத்து நின்ற போலீசார் அத்தனை பேருடைய கண்களும் முத்துசாமியின் மீது பாய்ந்தன.

கடைக்காரர் காத்தானும் வந்து கொண்டிருப்பவர் யார் என்று தெரிவதற்காக கூர்ந்து கவனித்தார்.

இவ்வளவு பேரும் தன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிருர்கள் என்பது முத்துசாமிக்குத் தெரியாது. அவன் எதையும் கவனிக்கவில்லை. அவன் எண்ணமெல்லாம். அன்று நடந்த சூதாட்டத்தில் மூழ்கி இருந்தது. அவனுக்குக் கிடைத்தமேசைக்காசு பத்து ருபாயைப்பற்றியும், ஆட்டத்தில்வெற்றி தோல்வி பெற்றவர்களைப்பற்றியும், அன்றையப் பொழுதை தான், மிக மகிழ்ச்சியுடன் போக்குவதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் சிந்தித்துக்கொண்டே வந்தான்.

இப்படி இன்ப நினைவுகளில் மிதந்து கொண்டே தெருக்கோடிக்கு வந்து சேர்ந்த அவன் கண்களில் போலீசார் தென்படாததில் வியப்பொன்றுமில்லை. மேலும் முத்துசாமி வந்திருந்த இடத்திற்கும் போலீசாரின் அணிவகுப்பிற்கும் இடையில் சுமார் 50 கஜ தூரமிருக்கலாம்.

அப்போது முத்துசாமிக்கு இருந்த மன நிலையில் 5 கஜ தூரத்தில் யாராவது நின்ருலும் கவனித்திருக்கமாட்டான் 50 கஜ தூரத்தில் நிற்பவர்களை அவன் கவனிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கமுடியாதல்லவா ?

முத்துசாமி தெருக்கோடியை மிதித்தவுடனே அவனுடைய கண்கள் தற்செயலாகத் தெரு ஓரமிருந்த சாக்கடைக் குத்தாவின.

அங்கே ஓர் பகுதி சாக்கடையிலும் இன்னோர் பகுதி வெளியிலுமாகக் கிடந்த மூவர்ணக்கொடி ஒன்றைக் கண்டான்.

அது புத்தம் புதிய கதர்த்துணியால் தைக்கப்பட்டதாயும் அகலம் நீளம் மிகுந்ததாகவும் காணப்பட்டது.

விரைந்து சென்று முத்துசாமி அதனை கையில் எடுத்து விரித்தான். அது ஏறக்குறைய 3 முழ அகலமும் 4½ முழ நீளமும் உடையதாக இருந்ததுடன் புதிய துணியாகவும் இருந்தது.

"சூதாட்டக் கச்சேரியில் விரித்துக் கொள்ள இது உதவும்" இப்படி எண்ணியது அவன் மனம்.

அதைத் தூசி மண் போகும்படி உதறிக்கொண்டே கள்ளுக்கடையை நோக்கித்திரும்பினுன். திரும்பியவுடனே அவன் முழங்காலில் பலமான தடியடி ஒன்று விழவே "அம்மா !" என்ற அவல ஒலியுடன் தரையில் சாய்ந்தான். சாயும்போது "யார் அடிக்கிருர்கள் !" என்கிற உள்ளுணர்ச்சி தூண்டவே கண்களைத் திருப்பினுன் இரண்டொரு போலீசார் தடியை ஓங்கிக் கொண்டிருப்பது மின் வெட்டுவது போல் ஒரு கணம் தோன்றியது. மறு கணமே தலையில் பலமாகத் தாக்கிய உணர்ச்சி; 'பட்' என்ற ஓர் ஒலி; அவனுடைய கண்கள் தாமாக மூடிக் கொண்டன. உணர்வு நீங்கிப் பிணம் போல் விழுந்தான்.

போலீசு வான் விரைந்து வந்தது. இரண்டு போலீசார் அவனைத் தூக்கி வானில் கிடத்தினர். கண்சிமிட்டி பார்ப்பதற்குமுந்தியே 'வான்' மறைந்து போயிற்று.

முத்துசாமிக்கு உணர்வு வந்து கண் விழித்தபோது தான் அழகிய இரும்புக் கட்டிலில் வெள்ளுறையிட்ட மெத்தையில் படுத்திருப்பதையும் வயிற்றில் கடுமையான பசி உண்டாகி இருப்பதையும் உணர்ந்தான்.

சூதாட்டத்தில் கிடைத்த 10 ருபாயும், அதனைத் தொடர்ந்து அவன் கள்ளுக்கடைக்குப் போனது முதல், போலீசார் அடித்ததுவரை நடந்த சம்பவங்களும், ஒன்றன்பின் ஒன்ருக அவனுடைய நினைவில் தோன்றின.

"போலீசார் ஏன் அடித்தார்கள் ?"

"சூதாட்டம் நடத்துவதற்காக அடித்தார்களோ ?"

"நான் படுத்திருக்கும் இடம் எந்த இடம் ?"

இத்தகைய கேள்விகள் அவன் உள்ளத்தில் தோன்றின.

கல்வியும், உலகியல் அறிவும் பெருத அவனுல் விடை காண முடியவே இல்லை.

"படுத்திருக்கும் இடத்தை சுற்று முற்றும் பார்த்தால் ஏதாவது விவரம் தெரியாதா ?"

அவனுடைய உள்ளுணர்வு வேலை செய்தது. திரும்பிப் படுத்துக்கொண்டு படுத்திருக்கும் இடத்தைப் பார்க்க விரும்பி திரும்ப முயன்றான்.

அப்போதுதான் காலிலும் தலையிலும் பலமான கட்டுப் போட்டிருப்பதும் அவைகளில் கடுமையான வேதனை தோன்றுவதும் தெரிந்தது.

"கால் ஒடிந்தே போய்விட்டதோ?" இப்படி நினைக்கும்போது அச்சத்தால் நடுங்கினான்.

"தலையில் என்ன ஒரே குடைச்சல்?" மீண்டும் ஒரு தெளிவற்ற நிலை!

சிறிது நேரம் சென்று, ஆளரவம் கேட்டு முத்துசாமி கண் விழித்தான். 50 வயதுள்ள ஒருவன் உணவு வட்டில் ஒன்றை கையில் ஏந்திக் கொண்டு சாப்பிடுகிறாயா? என்றான்.

"நான் எங்கே இருக்கிறேன்?"

"ஆஸ்பத்திரியில் இருக்கிறாய்!"

"எந்த ஆஸ்பத்திரி?"

"முங்கிலூர் ஆஸ்பத்திரி!"

"நான் எப்படி இங்கே வந்தேன்?"

"போலீசார் கொண்டுவந்தார்கள்!"

'எப்போ கொண்டு வந்தாங்க?

"நேற்று இரவில்!"

"அவங்க இருக்காங்களா?"

"உன்னைக் கொண்டுவந்தவர்கள் போய்விட்டார்கள். இப்போது வேறு போலீசார்கள் உனக்கு காவலாக இருக்கிறார்கள்."

"என்னை எதுக்காக அடிச்சாங்க இங்கே கொண்டாந்தாங்கண்ணு தெரியுமா?"

"கள்ளுக்கடை மறியல் செய்தாயாம் அதற்காகத்தான்"

"அட கடவுளே! நானா மறியல் செஞ்சேன்?"

'பின்னே உன்னை வீட்டிலிருந்தா பிடித்துக்கொண்டு வந்தார்கள்?'

இதற்கு என்ன சொல்வதென்று முத்துசாமிக்குத் தோன்றவில்லை. சிறிது நேரம் சும்மா இருந்தான். பிறகு:

"எனக்கு காலே ஒடிந்து போயிட்டதோ?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. டாக்டர் வந்திருக்கும்போது கேள்."

"அவர் எப்போ வருவார்?"

"சாயங்காலம் வருவார்"

"இப்போ பொழுது எவ்வளவு ஆயிருக்கும்?"

"காலை 10 மணியிருக்கும். சரி; சாப்பிடுகிறாயா?

"என்னாலே ஏந்திருக்க முடியலையே"

"நான் ஊட்டுகிறேன்; நீ படுத்துக் கொண்டே சாப்பிடு"

முத்துசாமி சாப்பிட்டு முடித்தான். உடம்பில் கொஞ்சம் தெம்பு ஏற்பட்டது. அதன் பிறகுதான்,

தன்னைபோலவே இன்னும் பலர் அக்கம் பக்கம் கட்டில்களில் கிடந்ததும் தெரியவந்தது.

முத்துசாமிக்கு காயங்களெல்லாம் ஆறி உடம்பு குணமடைய ஒரு மாதம் சென்றது.

அதன் பிறகு போலீசார் அவனை ஆஸ்பத்திரியிலிருந்து அழைத்துக் கொண்டுபோய் முங்கிலூர் சிறையில் வைத்தார்கள்.

தன்னோடு கள்ளுக்கடை மறியல் செய்த குற்றத்திற்காக சிறைப்பட்ட மற்றும் ஆறுபேர்களை சிறையில் சந்தித்தபின் முத்துசாமிக்கு எல்லாரும் இப்போது நண்பர்களாகி விட்டனர்.

மறியலில் சம்பந்தப்பட்டவர்கள் என்று சொல்லப்படுகிற ஏழுபேர்களில் நமது முத்துசாமியே பெரியவனாக இருந்தான். மற்ற ஆறுபேரும் 22-வயதுக்குட்பட்ட இளைஞர்களாயிருந்தனர். அத்துடன் போலீசாரால், அடித்துக் கைது செய்யப்படும் போது கையில் காங்கிரசுக் கொடியுடன் இருந்தவனும் நமது முத்துசாமியே.

அவன் சாக்கடையிலிருந்து எடுத்து உதறிக் கொண்டிருந்த காங்கிரசுக் கொடி, அவனுக்கு முன்னால் உண்மையாகவே மறியல் செய்யவந்த தொண்டர்களால் போலீசாரின் அடி உதைகளுக்கிடையே கை தவறி விடப்பட்டதுதான்.

ஆனால், இப்படிப்பட்ட வரலாறுகளையெல்லாம் போலீசார் கவனித்து நடப்பதே வழக்கமில்லையே.

ஆகையால், போலீசார் மறியல் செய்தவர்கள்மேல் வழக்குத் தொடரும்போது, இரண்டிரண்டு பேராக கைது செய்துகொண்டு வந்த ஆறு பேர்களையும், தனியாக கைது செய்துகொண்டு வந்த முத்துசாமியுடன் சேர்த்து, ஏழு பேரும் கூட்டமாக வந்ததாகவும், கூட்டத்தின் தலைவன் முத்துசாமி என்றும், அவன் கையில் காங்கிரசுக் கொடி பிடித்திருந்ததாகவும் இராஜத்துவேஷமான சுலோகங்களை சொல்லிக் கொண்டு கள்ளுக்கடைக்கு முன்னால் நின்று போக்குவரத்துக்கு இடையூறு செய்ததாகவும், போலீசாரை அவமரியாதையாகப் பேசினதாகவும், மூன்று பிரிவாக வழக்குகளை சோடித்து, முங்கிலூர் முதல் வகுப்பு மாஜீஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்தார்கள்.

வாய்தா நாளும் வந்தது. அன்று காலை 10 மணிக்கே போலீசார் 10 பேர் சிறைச்சாலைக்கு வந்து, முத்துசாமியை தனியாக அழைத்து மாஜிஸ்திரேட் கேட்பதற்கெல்லாம் "ஆம், ஆம்" என்று ஒப்புக்கொண்டால்,

அநேகமாக தண்டனை இல்லாமல் போகும். அப்படியே தண்டித்தாலும் இரண்டொரு நாள் சிறைத் தண்டனைதான் கிடைக்கும். எனவே, குற்றத்தை ஒப்புக்கொள் என்றுஉபதேசம் செய்தார்கள்.

அதுபோலவே மற்ற ஆறுபேருக்கும் தனித் தனியே உபதேசம் செய்தார்கள்.

உபதேசம் முடிந்து எல்லாரும் கோர்ட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

இவர்கள் கோர்ட்டு வாசல் ஏறிய வுடனே சொல்லி வைத்ததுபோல "முத்துசாமி வகையறு! முத்துசாமி வகையறு!' என்று கோர்ட் பியூன் கத்தினான்.

நீதிபதியின் முன்னால் முத்துசாமியும் மற்றும் ஆறுபேரும் நிறுத்தப்பட்டனர்.

"குற்றத்தை ஒப்புக் கொள்கிறீர்களா?"

"ஆம், ஆம்"

இராஜத்துவேஷ சுலோகங்களை முழங்கிய குற்றத்திற்கு 6 மாதம், அமைதிப் பங்கம் விளைத்த குற்றத்திற்காக 3 மாதம் போக்குவரத்திற்கு இடையூறு விளைத்த குற்றத்திற்காக 1 மாதம், ஆகப் பத்து மாதம் கடுங்காவல் தண்டனை என்று தீர்ப்புச் சொன்னார் நீதிபதி

'ஒரு குற்றமும்செய்யாத தனக்கு 10 மாதம் தண்டனையா?" என்றது அவன் உள்ளம்.

'போலீசார், இரண்டொரு நாள் தண்டனை என்றார்களே! ஏமாற்றி விட்டார்களோ?' அவன் பேதை நெஞ்சம் இப்படி படபடத்தது.

போலீசார் முத்துசாமிக்கும் மற்ற ஆறுபேருக்கும் விலங்குகளைப் பூட்டி, வானில் ஏற்றினார்கள். 'வான்' மதுரையை நோக்கிப் பறந்தது.

★

பத்து மாதங்களும் ஊர்ந்து கொண்டிருந்தன. மதுரை மத்திய சிறையில் முத்துசாமிக்கும், அவன் தோழர்களுக்கும், காய்கறித் தோட்டங்களில் தண்ணீர் பாய்ச்சி காய்கறி சேகரித்துக் கொடுக்கும் வேலையை செய்யச் சொல்லி இருந்தார்கள்.

அப்போதுதான் முத்துசாமிக்கு சில உலக விவகாரங்கள் தெரிய வசதி ஏற்பட்டது.

"உடும்புக்குடிக் கள்ளுக்கடை மறியலில் தலைமை தாங்கி வந்தவன்" என்கிற, போலீசாரின் தவறான குற்றச்சாட்டு, ஆரம்பத்திலேயே யாரும் மறுக்காமல் ஒப்புக் கொள்ளப்பட்ட காரணத்தால், அது, சிறைச்சாலை வரை 'ரிக்கார்டு' செய்யப்பட்டதாகி அதன் பயனாக முத்துசாமி 'உடும்புக்குடி தலைவர்' என்று, உடும்புக்குடி தொண்டர்கள் அழைத்தார்கள். இவர்களைப் போல்மறியல் கைதிகளாகி வந்திருந்த மற்ற ஊர் காங்கிரசுத் தொண்டர்களும் அழைப்பது வழக்கமாகிவிட்டது.

இப்படி பட்டம் சூட்டி அழைப்பது ஒருவனுக்குமட்டும் பிடிக்கவில்லை

அவன்தான் பள்ளி இறுதித் தேர்வில் கோட்டை விட்டு வந்த பழனிமுத்து!

முத்துசாமியின் மேல் அவனுக்கு வெறுப்போ துவேஷமோ இருந்ததில்லை. ஆனால், கையெழுத்துக்கூட போடத் தெரியாத முழு மூடனை 'உடம்புக்குடித் தலைவர்' என்பது, பழனிமுத்துக்கு என்னவோ போல் இருந்தது.

ஆயினும், அவனையும் நடைமுறையில் நெருங்கிப் பழகி இன்சொற்களால் வசப்படுத்தி அன்புகொள்ளச் செய்துவிட்டான் முத்துசாமி.

அதன் பிறகு அவனிடத்திலேயே 'முத்து' என்ற முன்றெழுத்துக்களை எழுதக் கற்றுக்கொண்டான் முத்துசாமி அத்துடன் வெள்ளைக்காரன்தான் நாட்டை ஆளுகிறான் என்பதும், நாட்டைச் சுரண்டுகிறான் என்பதும், காந்தி மகாத்மா வெள்ளைக்காரன் ஆட்சியை எதிர்க்கிறார் என்பதும், தெரிந்துகொண்டான்.

பத்து மாதங்களும் ஒருவாறாகக் கழிந்தன ஒரு நாள் இவர்களை எல்லாம் விடுதலை செய்தார்கள்.

விடுதலை தினத்தன்று, உடும்புக்குடி காங்கிரசுப் பிரமுகரும், பெரிய நிலக்கிழாரும் மறியல் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பே ஏதோ அலுவலிருப்பதாக இலங்கைக்குப் போய் விட்டவருமான, திருவாளர். தருணதந்திரம் பிள்ளை அவர்களும், மற்றும் சிலரும் மதுரை சிறைச்சாலைக்கு வந்து சிறைச்சாலை வாசலில் விடுதலையாகும் தொண்டர்களுக்கு மாலை சூட்டினார்கள்.

அப்போதுதான் திருவாளர் தருணதந்திரம் முத்துசாமியைப் பார்த்தார். இதற்கு முன்னால் அவனை அவர் பார்த்ததில்லை. "இவன் யார்?" தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டார். 'யாராயிருந்தால் என்ன! உடும்புக்குடியின் தியாக எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. அது, போதும்; என்று தனக்குள்ளேயே சமாதானம் செய்து கொண்டார். ஆனால், பழனிமுத்து முதலான தொண்டர்கள் ஆறு பேரும் முத்துசாமியை 'தலைவர்' என்று குறிப்பிட்டதைக் கேட்டபோது, திருவாளர் தருணதந்திரம் அசந்து போனார் என்றே சொல்லலாம்.

ஆனாலும், அதையெல்லாம் விவரமாகத் தெரிந்துகொள்ள அவர் விரும்பவில்லை.

காரணம்; போராட்ட நேரத்தில் தான் தப்பித்துக்கொண்டதாக பேச்சுவாக்கில் யாராவது சொல்லிவிட்டால்...? என்கிற பயம்! இதனை யாரும் நினைத்ததுகூட இல்லை. அந்த அளவுக்கு உடும்புக்குடி காங்கிரசில் சிந்தனையும் ஈடுபாடும் உள்ளவர்கள் ஒருவருமில்லை. அப்படி இருந்திருந்தால் "முங்கிலூர் ஆஸ்பத்திரியில் குற்றுயிராக அடிபட்டுக் கிடந்தபோது வராதவர்கள், கடந்து 10 மாதமும் சிறைச்சாலைப் பேட்டிக்கு வராதவர்கள், இப்போதுமட்டும் வருகிறார்களே ஏன்? என்பதை யோசித்திருக்கலாமே! நிலைமை இப்படிஇருந்தாலும் தருணதந்திரத்திற்கு அச்சம் இருக்கத்தான் செய்தது. தொண்டர்கள் அதையெல்லாம் யோசிக்கவே இல்லை-பாவம்! அப்பாவிகள்!

ஆனால், தலைவர் பட்டம் பெற்ற காரணத்தால் முத்துசாமி தருணதந்திரத்தின் கவனத்திற்கு ஆளானான்.

எனவே, "இந்தப் புதியவன் யார்?" "இவன் நம்முடைய அந்தஸ்து கௌரவம் இவைகளை மதிக்கும் சுபாவம் உள்ளவனா?" இவனை எப்படி நம்முடைய வசத்தில் கொண்டு வரலாம்?" என்றெல்லாம் ஆலோசிக்கலானார்.

முத்துசாமி ஒரு மூடன் என்பது தெரிந்திருந்தால் தருணதந்திரம் இவ்வளவு சிந்தனை செய்திருக்கமாட்டார்.

அவர் இவ்வளவு கவலைப்படுவதும், உடும்புக்குடி காங்கிரசு என்றால், அது திருவாளர் தருணதந்திரம் பிள்ளை என்று, காங்கிரசு மேலிடத்தார் நினைக்க வேண்டும் என்பதற்கே! அதே நேரத்தில் சிறை. தடியடி, என்றால் பக்குவமாக ஒதுங்கிக்கொள்ள வேண்டும்! இவை, அவருடைய புனிதமான கொள்கைகள்.

இந்தக் கொள்கைகள் சாயம் போய் விடாமல் இருக்க வேண்டுமே, இந்தப் புதியவனால் ஏதாவது நேரிட்டால்? எதற்கும் அவனிடம் அறிமுகம் செய்து கொள்வோம். என்ற எண்ணத்துடன் முத்துசாமியை நெருங்கி "தம்பி, உன் பேரென்ன?"

"முத்துசாமி"

"எந்த ஊர்"

"உடும்புக்குடி"

"அடே, நம்ம ஊர்தானா? உங்க அப்பா பேரென்ன?

"உதிரமாடக் கொத்தனார்"

"அட நம்ம உதிரமாடக் கொத்தனார் மகனா?" நீ, எப்போ காங்கிரசிலே சேர்ந்தே?"

"......................"

என்ன தம்பி பேசாம இருக்கே? எவ்வளவு நாளா—இருக்கேன்னு சொன்னா என்ன?

(தொடரும்)

5-ம் பக்கத் தொடர்ச்சி

பிரபா : ஓ!

அஷ்வ : ஏன்?

பிரபா : ஊரையே மயக்கத்தில் ஆழ்த்தும் மகாகவி அஷ்வ கோஷின் கவிதைகளில், என் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டதால்.

அஷ்வ : அதிகமாகப் புகழ்கிருயே!

பிரபா : இல்லையே! நான் அனுபவித்தேன்; சொல்கிறேன். என் செவிகளில் நீங்காது நின்று ரீங்காரமிடும் உங்கள் சுவை யான கவிகளைக் கேட்பதற்காக, நான் தினசரியும் இங்கு வருவதில் தவறுவதே கிடையாது.

அஷ்வ : அஷ்வகோஷின்மீது அவ்வளவு பிரியமா உனக்கு?

பிரபா : இதயங்களை விழ்த்தும் பொல்லாத சக்தி - உங்கள் இசைக் கும் கவிக்கும் இருக்கும்போது - என்னுல் என்ன செய்ய முடியும்?

அஷ்வ : அன்புள்ள ரசிகையே! உன் வார்த்தைகளைக் கேட்ட என் உள்ளம், இன்பத்தால் நனைந்து குளிர்கிறது. கண்களைச் சுண்டியிழுக்கும் பேரழகு படைத்த உனது அன்பைப் பெற்ற அஷ்வகோஷ்-ஆயுள்முழுதும் உன் செம்மலர்ப் பாதங்களைக் கைகளில் தொட்டு கண்களில் ஒற்றி உனக்கு நன்றி செலுத் தக் கடமைப்பட்டிருக்கிருன்.

பிரபா : ஐயயோ! ஏன் கவிஞரே - அழிவிற்குக் காரணமாக இருப் பதும், விரைவில் அழிந்தும் போவதுமான எனது சாதாரண அழகையா இவ்வளவு மரியாதையாக மதிப்பிடுகிறிர்கள்?

அஷ்வ : அழகின் மயக்கத்தில்தான் உலகமே ஆடுகிறது பெண்ணே-என் கவிதைகளின் அழகினுல்தானே என்னையும் நீ பெரியவனுக மதிக்கிருய்?

பிரபா : ஆமாம்!

அஷ்வ : ஆனல், இதுவரை நான் பாடிய காதல் கவிதைகளி லெல்லாம் அறவே சுவையே கிடையாதென்பதுதான் எனது எண்ணம்.

பிரபா : ஏன் அப்படிச் சொல்கிறிர்கள்?

அஷ்வ : அவைகள் உயிரும் உணர்வும் நிரம்பிய கவிதை கள் அல்லவே அல்ல. வெறும் வார்த்தைக் கூட்டங்கள். நான் படித்ததையும் கேட்ட தையுமே வைத்துப் பாடிய சாரமற்ற சக்கைகள். ஆமாம் —உன் பெயரையே சொல்ல வில்லையே நீ?



பிரபா : பிரபா.

அஷ்வ : பிரபா-இதயங்களைத் தட்டியெழுப்பும் காதல் கவிதைகள் இயற்ற வேண்டுமென்ருல், அதை அனு பவித்துச் சுவைத்து, உணர்ந்து மகிழ்ந்தால்தான் பாட முடியுமென்று நான் நினைக்கிறேன். நீ என்ன நினைக்கிருய்?

தியாகன்

பிரபா : உங்கள் ஆசையை மறுத்துச் சொல்வதற்கு எனக்கு வழி தெரியவில்லை.

அஷ்வ : நீ எங்கே இருக்கிருய் பிரபா?

பிரபா : இதோ...உங்கள் முன்னுல்.

அஷ்வ : உன்னைப் பார்த்ததிலிருந்து இன்னும் ஒருமுறைகூட என் விழிகள் இமைக்கவே இல்லையே! நான் கேட்டது - இப்பொழு தல்ல; எப்பொழுதும்.

பிரபா : உங்களுக்குப் புத்தப்பிரியனைத் தெரிந்திருக்குமே?

அஷ்வ : ஓ...தெரியுமே.

பிரபா : தெரியுமா?

அஷ்வ : பார்த்ததில்லையே! கேள்விப்பட்டிருக்கிறேன். கிரேக்க நாடகங்களை நடத்துவதற்காக மன்றம் ஒன்று வைத்திருக் கிருரே-அவரைத்தானே சொல்கிருய்?

பிரபா : ஆமாம்...

அஷ்வ : அங்கே...?

பிரபா : நடிகையாக இருப்பவர்களில் நானும் ஒருத்தி.

அஷ்வ : நீ...?

பிரபா : கிரேக்கப் பெண்தான்.

அஷ்வ : கற்பூரப் படிகங்களைப்போல் ஒளிரும் உன் வெண்ணிற உடலும், காலைக்கதிரவனைப்போல் மின்னும் உன் செந்நிறக் கேசங்களும், நீ சொல்லாமலேயே உன்னை யாரென்று சொல்லுகின்றனவே! நான் அதைக் கேட்கவில்லையே! ஆமாம், இவ்வளவு அழகாகவும் தெளிவாகவும் எங்கள் பிராகிருத மொழியில் பேச எப்படி இயலுகிறது உன்னுல்?

பிரபா : உங்கள் கவிதைகளைக் கேட்டேன்; படித்தேன்; தெளிந் தேன்; பேசுகிறேன். ஏன் கவிஞரே! வசதி வாய்த்தால் எங்கள் நாடகக் கூடத்திற்கு ஒருநாள் வந்துபோகிறிர்களா?

அஷ்வ : நீ அழைத்தால்-உனக்கு விருப்பமிருந்தால் ஆணையிடு, உனக்குப் பின்னுலேயே நான் வருகிறேன். என்ன சொல் கிருய்?

பிரபா : மகிழ்ச்சியென்று சொல்லுகிறேன். வாருங்கள் போகலாம்.

காட்சி 2. புத்தப்பிரியனின் நாடகமன்றம்

உலகத்தைக் கலக்கிய மாவீரன் அலெக்சாண்டர், சிந்துநதிக் கரையில் செயக்கொடி நாட்டிச் சென்றபின்—வடநாட்டில் கிரேக்கர்களின் நிரந்தரக் குடியேற்றமும், இந்தியக் கிரேக்கக் கலப்பும் அதிகமாயிற்று. புத்தப்பிரியன் அயோத் தியிலுள்ள கிரேக்க நாடகமன்றமொன்றின் தலைவன். அஷ்வ கோஷும் பிரபாவும் அந்த மன்றத்திற்குள் நுழைகின்றனர்.

புத்தப்பிரியன் : யார்? மகாகவி அஷ்வகோஷா! வரவேண்டும்; கவிஞரே! வரவேண்டும்.

அஷ்வ : ஏதேது!

புத்தப் : அமருங்கள்.

அஷ்வ : நண்பரே!

புத்தப் : கவிஞரே!

அஷ்வ : நான் சாதாரணக் கவிஞன்தானு என்ற சந்தேகமே இன்னும் என்னைவிட்டு நீங்கவில்லை. அதற்குள் என்னை மகா கவியாக்கிவிட்டீர்களே-தாங்கள்!

புத்தப் : உங்களின் ஊர்வசி வியோகத்தை, ஊரிலே எவ் வளவு புகழ்ந்து பேசிக்கொள் கிருகளென்பது உங்களுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?

அஷ்வ : என்ருல்......சாகேதத்தில் முட்டாள்களின் எண்ணிக்கை பெருகிவிட்டதென்று சொல் லுங்கள்.

(எல்லோரும் சிரிக்கின்றனர்)

புத்தப் : உண்மையில்தான் சொல்லுகிறேன். இன்று உங் களைச் சந்திக்க வேண்டு மென்று நான் நினைத்திருந் தேன்.

அஷ்வ : ஏன்...?

புத்தப் : உங்கள் ஊர்வசி வியோ கத்தைத் தங்களிடம் நாடகமாக எழுதி வாங்கி அதை நாங்களே நடிக்க வேண்டுமென்று பெரி தும் விரும்புகிறேம்.

அஷ்வ : என்ன! எனது ஊர்வசி வியோகத்தையா சொல்கிறிர்கள்?

புத்தப் : ஆமாம் கவிஞரே! நாங்கள் இப்பொழுது நடத்திக் கொண்டு வரும் கிரேக்க நாடகங்களை எங்கள் குடும்பத்தவர் கள் மட்டுந்தானே பார்க்கின்றனர். பிராகிருத மொழியில் உங்கள் நாடகத்தை நடித்தால், இந்த ஊரே அல்லவா பார்த்து மகிழும்.

அஷ்வ : ஓ...கோ!

பிரபா : இதற்கேன் இவ்வளவு தயங்குகிறிர்கள்? சரியென்றுதான் சம்மதியுங்களேன். தங்களுக்குப் பிரியமென்ருல் தாங்களும் இதில் நடிக்கலாமே?

புத்தப் : ஆகா! பிரமாதமான யோசனை பிரபா. ஆமாம் கவிஞரே- தங்களின் இனிமையான குரலுக்கும், அருமையான முகத் திற்கும்...

அஷ்வ : பெண்வேடம் போட்டால் கனகச்சிதமாக இருக்குமென் கிறிர்களா?

புத்தப் : அஹ்—ஹ—ஹ—ஹா. இன்னெருமுறை அப்படிச் சொல்லாதீர்கள் கவிஞரே!

அஷ்வ : ஏன் நண்பரே?

புத்தப் : எங்கே தனக்குப் போட்டியாக நீங்கள் வந்துவிடப் போகிறிர்களோ என்று பிரபா கோபித்துக்கொள்ளப் போகிருள்.

அஷ்வ : அஹ்—ஹ—ஹ—ஹா.

புத்தப் : ஊர்வசி வியோகத்தின் நாயகன் தாங்கள்தான். ஆமாம் புரூரவாக தாங்கள் நடித்தால்தான் நன்ருக இருக்கும்.

(11-ம் பக்கம் பார்க்க)

முதற் பக்கத் தொடர்ச்சி

இதிலிருந்து சிறுத்தையின் உடல் வலிமையை ஒருவாறு யூகிக்கலாம். நான்கு நாய்கள் பிடித்துக்கொண்டால் தப்பிக்க முடியாததுதான் சிறுத்தை.

புலியின் உடற்பலம் சிறுத்தை போன்றதல்ல. 400 பவுண்டுக்கு மேற்பட்ட எடையுள்ள மாட்டைக் கூட மிக எளிதாக வாயில் கவ்விக்கொண்டு 3 அடி 4 அடி உயரமுள்ள குன்றுகளில் ஏறும், வேலிகளைத் தாண்டும்.

எப்படிப்பட்ட நாயும் பத்துச் சேர்ந்தாலும்கூட புலியை நெருங்க முடியாது. நாய்கள் சாதாரணமாக 20 கல் வேகத்திற்குமேல் ஓடமுடியாது. புலியோ 40 கல் வேகத்திற்கு மேல் ஓடக்கூடும். புலி அறைந்தால் நாய்கள் ஒரு அறையிலேயே செத்துப் போய்விடும்.

தமிழ்நாட்டில் புலிகள் இப்போது அதிகமில்லை. மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள அடர்ந்த காடுகள் நிறைந்த சமவெளிகளில், 3000 அல்லது 3500 அடி உயரத்திற்கு மேற்படாத இடங்களில் புலிகள் இருக்கின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த தென்காசி வட்டம் திருக்குற்றால மலைச்சாரலையொட்டி பாவநாசம் வரையிலும் புலிகள் அரிதாகக் காணப்படுகின்றன.

இராமநாதபுரமாவட்டத்தில் சிறுத்தைகள்தான் மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில் அடிக்கடி காணப்படுகின்றன. இங்கே மந்திகள் ஏராளம்.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியகுளம் வட்டத்தில், ஆண்டிபட்டி, தேனியை ஒட்டியுள்ள மேற்கு மலை அடிவாரத்தில், சில சமயங்களில் கழுதைப்புலிகள் தென்படுகின்றன. இது, சிறுத்தையைவிடத் துஷ்டத் தனமும், கோழைத்தனமும் கொண்ட பிராணியாகும்.

போடிநாயக்கனூர் பச்சைக் கூமாட்சி மலைகளில் புலிகள் அரிதாக வருகின்றன. வண்டிப் பெரியாரிலும் அதனை யொட்டியுள்ள மலைகளிலும் புலிகள் சற்று அடிக்கடிகாணப்படுகின்றன.

கொடைக்கானல் மலையில், செந்நாய்களும், சிறுத்தைகளும், கரடிகளும் இருக்கின்றன. புலிகள் இல்லை என்றே சொல்லலாம்.

நீலகிரியில் கரடிகள் சிறுத்தைகள் தான் அடிக்கடி காணப்படுகின்றன.

இந்தப் பிராணிகள் எல்லாமே மனிதரைக் கண்டு அஞ்சக் கூடிய பிராணிகள்தான். அதிலும், கையில் தீப்பந்தம், தரையில் அடித்து வெடிக்கச் செய்யும் வேட்டு, இவைகள் இருந்தால் ஓடிவிடக்கூடியவைகள்.

புலிகள் வீரத்திலும் பலத்திலும் சிறந்தவை என்றுகருதப்படுகின்றன. ஏறக்குறைய புலிகளுக்கு சமமான பிராணி சிங்கம் ஒன்றுதான். சிங்கம் தமிழ் நாட்டில் இல்லை. சிங்கமும் புலியும் ஒன்றையொன்று தாக்கிக் கொள்ள நேர்ந்தால் வசக்கேடான வகையில் எப்போதாவது புலி அடிபட்டுச் சாகலாமே தவிர பெரும்பாலும் சிங்கம்தான் சாக நேரிடும்.

காரணம் இதுதான்:

புலிக்கு வாயும் கையும் (முன்கால்கள்) ஒரே காலத்தில் எதிரியைத் தாக்குவதற்குப் பயன்படும். அதாவது பாய்ந்தவுடனே முன்கால் நகங்களை எதிரியின் உடலில் ஊன்றிக் கிழிப்பதுடன் பற்களாலும் கிழித்தெறிந்து விடும்.

சிங்கத்திற்கு வாயையும் கையையும் ஒரே நேரத்தில் பயன் படுத்திப் பழக்கம் இல்லை.

சிங்கம் எதிரிமேல் பாய்ந்தவுடனே கையால் அறைந்து கிழித்துவிட்டு அதன் பிறகே வாயைக் கொண்டு கிழிக்கும் இயல்பு வாய்ந்தது.

இதனால் சிங்கம் புலியுடன் போர் நடத்தி வெல்ல முடியாமல் போய் விடும்.

ஆனால் புலியைவிட சிங்கம் பெருந்தன்மையுள்ள பிராணி. வயிறு நிறைந்து விட்டால் எந்தப் பிராணியையும் கொல்லாது—சீறுது.

புலியின் தன்மை சற்று மாறுபட்டது. வயிறு பசித்தால் கண்ட பிராணிகளைக் கொல்லாமல் விடாது. பசிக்காதபோது பிராணிகள் எதையாவது கண்டால் சீறும் பாயும். அந்தப் பிராணிகள் ஓடிவிட்டால் துரத்திக் கொண்டு போகாது—அவ்வளவுதான். பசியாய் இருக்கும் போது துரத்திப் பிடிக்காமல் நிற்காது.

சிறுத்தை கண்ணில் கண்ட எல்லாப் பிராணிகளையும் — அதற்கு மிஞ்சின பலசாலியான பிராணிகளைத் தவிர மற்றதைக் கொன்றே தீர்க்கும். கழுதைப்புலி கொலை செய்வதற்கென்றே தேடித்திரியும்.

யானைகள் கூட்டமாக வரும்போது புலியோ சிங்கமோ எதுவுமே நெருங்காது. பழமொழி ஒன்று சொல்வார்கள் "யானைக் கூட்டத்தில் சிங்கம் புகுந்தது போல்" என்று. ஆனால், நடைமுறையில் யானைகளின் கூட்டத்தை எந்தப் பிராணியும் எதிர்க்கத் துணிவதில்லை என்றே தெரிகிறது.

தனியாக யானைகள் அகப்பட்டுக் கொண்டால் புலியோ சிங்கமோ எதிர்க்கும்—கொல்லும். யானையால் கொல்லப்படுவதும் உண்டு.

யானைக் கன்றுகளை வேட்டையாடுவதில் புலிக்கும் சிங்கத்திற்கும் மிக்க உற்சாகம். இதனால் தாய்யானை கன்றுகளை தனியாக விடுவதில்லை. கூட்டத்தின் மத்தியில் விட்டே எங்கு போனாலும் அழைத்துக் கொண்டு போகும்.

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் புலிகள் ஏராளமாக இருந்திருக்கு மென்று கருதும்படி தமிழ் இலக்கியங்கள் இருக்கின்றன.

அக்காலத்தில் காதலியைத் தேடி நள்ளிரவில் மலையடிவாரங்களிலுள்ள சிற்றூர்களுக்கு இளைஞர்கள் போய் வந்ததாக அகநானூறு குறுந்தொகை முதலிய இலக்கியங்கள் கூறுகின்றன.

அப்படிப் போகின்ற இளைஞர்கள் தனியொருவனாய் கையில் ஏந்திய வேலொடு அஞ்சாமல் போய் வந்ததாக உள்ள பாடல்கள் ஏராளமிருக்கின்றன.

"..................
குஞ்சரம் நடுங்கத்
தாக்கிக் கொடுவரிச்
செங்கண் இருப்புலி
குழுமும் சாரல்
வாரல் வாழியர் ஐய!......

அகம் 92

"..............
அடுபுலி வழங்கும்
ஆரிருள் நடுநாள்
தனியை வருதல்......"

அகம் 118

"யானைகள் நடுங்கும்படி தாக்கி விட்டு வரிகளையும் சிவந்த கண்களையும் உடைய வலிய புலிகள் கூடி நிற்கும் மலைச்சாரல் வழியாக தனியாக வராதே" காதலியர் காதலனுக்குக்கூறும் கருத்துடைய பாடல்கள் மேலே கண்டவை மட்டுமல்ல, அகநானூற்றிலே 168, 218, 318, 362, 252, ஆகிய பல பாடல்கள் இருக்கின்றன.

புலியை ஒருத்தி முறத்தால் அடித்து விரட்டினாள் என்பதும் இலக்கிய ஆதாரமுள்ளதே. அத்தகைய வீரம் செறிந்த தமிழ்நாடு இன்று இருக்கும் நிலைமை என்ன?

"புலிப்பாணி"

அறப்போர் வெல்க!

திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் இதயத்தைத் துடிக்கச் செய்யும் வகையில் இலங்கையிலே நடைபெறும் நிகழ்ச்சிகள் செய்திகளாகக் கிடைத்துக் கொண்டுள்ளன.

இலங்கைத் தமிழரின் இன்னல்கள், இலங்கை அரசு அவர்கள் மீது திணிக்கின்ற உரிமைச் சட்டங்கள் வாழ்வுப் பிரச்னைகளை வதைக்கின்ற சட்டங்கள், நாளுக்கு நாள் வலுப்பெற்றுவிட்டன.

பல ஆண்டு காலமாகத் தங்களுக்கு தீங்கு இழைக்கப் பொறுக்காத தமிழர்கள் பல்வேறு வகையான கிளர்ச்சிகளின் வாயிலாக இலங்கை அரசினரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்துள்ளனர்.

தற்போது வாழ்வா சாவா என்ற உயரிய நல் நோக்கத்துடன் தமிழர்கள், ஆட்சிப் பீடத்தவருக்கு அறைகூவல் விடுத்துள்ளனர்.

அன்னையாக இருக்க வேண்டிய சிரிமா ஆட்சி அடக்குமுறையினை எப்போதும் இல்லாத வகையில் பயன்படுத்துகிறது. இலங்கையைத் தாயகமாகக் கொண்டுவிட்ட இலட்சக்கணக்கான தமிழர்கள் தங்களின் உரிமைகளை நிலைநாட்டும் போராட்டத்தில் இரத்தம் சிந்துகின்றனர். அடக்குமுறை தருகின்ற அடிதடிகளையெல்லாம் அதிகார வர்க்கம் தருகின்ற அன்புப் பரிசுகளாகவே ஏற்றுக்கொள்கின்றனர். இலங்கைத் தமிழர்களுக்காகப் பணியாற்றும் தினகரன்-சுதந்திரன் போன்ற ஏடுகள் கண்ணீர் வடிக்கத்தக்க காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும்செய்திப் படங்களாகத் தருகின்றன. சிங்களத்து வீதிகளில் தமிழ்த் தொண்டர்கள் தாக்கப்படுவதையும், கால்களைப் பிடித்துத் தெருக்களில் தொண்டர்கள் இழுத்துச் செல்லப்படுவதையும், காவல் படையினரின் கழிகள் அவர்களின் எலும்புகளை முறித்துக் காட்டுவதையும், தொண்டர் தம் உடல்களின் மேல் உராய்ந்து நிற்கும் போலீஸ் வண்டிகளையும் காட்டுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிடர் தம் நலன் தேடிப் பணியாற்றும் விடுதலை இயக்கமாக இருப்பதால் தோன்றிய நாளிலிருந்தே கடல் கடந்த பகுதிகளில் வதியும் திராவிடமக்களுக்காகவே வாதாடுகின்ற சிறந்த அமைப்பாகத் திகழ்கிறது. வேறு எந்த அமைப்பும் எடுத்துக் கொள்ளாத பல முயற்சிகளைக் கழகம் எடுத்துக் கொண்டிருப்பதால் தான் வெளிநாடுகளிலே உள்ள பெரும்பகுதித் தமிழர்கள் கழகம் காட்டும் தனியாட்சி இலட்சியத்தினைப் போற்றுகிறார்கள் என்றென்றும் வளர வாழ்த்துகிறார்கள்.

வெளிநாடு செல்லுகின்ற தமிழர்கள் கப்பல்தட்டிலே நின்று "தாயகம் விட்டுச் செல்கிறேன். பிழைக்கவழியின்றி வெளிநாடு செல்கிறேன்" என்று கண்ணீர் விடுகின்றனர். அந்தக் கண்ணீர் கொண்டு எழுதப்பட்டதுதான் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சியம் என்பதாக நம் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே அழகுறக் குறிப்பிட்டுள்ளார்கள்.

முன்னேற்றக் கழகத்தின் வாழ்வும் வளர்ச்சியும் தங்களின் வாழ்க்கையில் மிகச்சிறந்த மலர்ச்சியைத் தரும் என்று நம்புகிறார்கள் இலங்கைத் தோட்டங்களில் உழைத்து மண்ணைப் பொன்னாக்கியவர்கள் தமிழர்கள் என்பதை எவரும் மறுத்தது இல்லை. இருந்தாலும் அவர் தம் நெஞ்சத்துயரங்கள் துடைக்கப்படவில்லை.

தமிழ்மொழியினைத் தாழ்த்துவதும் தமிழர்களைத் துரத்துவதும் தங்கள் கடமையென்று சிங்களவர் பேசுவது பலஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெறும் திட்டமிட்டுச் செய்யப்படும் வேதனைக்குரிய செயல்களாக உள்ளன. வதைபடும் தமிழர்கள் சட்டங்களின் துணையாலே வஞ்சிக்கப்படுகிறார்கள் வாழப்புகுந்தவர்கள் வாழத்தகுதியற்றவர்களாக உரிமைகள் உறவுகள் பறிக்கப்பட்டவர்களாகக் கண்ணீர் வடித்தே வாழ்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் தமிழருக்குத் தீங்குகள் விளையும் போதெல்லாம் தன்னுடைய கண்டனக் குரல் தரத்தயங்கியதில்லை, தாயகம் விட்டுச் சென்றுள்ள அந்தத் தமிழர்களுக்காக இந்திய சர்க்கார் எதையும் செய்யாமல் அலட்சியப் படுத்தியிருப்பதை வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் அவர்களுக்கு நினைவூட்டியது. இலங்கை சென்ற பண்டிதர் தமிழர் பிரதிநிதிகளைச் சந்திக்க மறுத்தார், விசயலட்சுமியாரின் புதல்வியருடன். அன்றைய தூதுவர் தேசாய் நாடக அரங்கில் நடனமாடியதைக் கண்டு களித்த பெரியவர்—மகான்-பண்டிதர் தெருவிலே நின்ற தமிழர்களின் குரலைக் கேட்கவில்லை! இலங்கை அரசினருடன் எதுவும் பேசவில்லை. இவர் எதைச் சொன்னாலும் அவர்கள் கேட்பதற்கும் தயாராக இல்லை! பாராளுமன்றத்தில் பிரச்னைவந்த போதெல்லாம் தள்ளி வைத்தனர்.

இலங்கைத் தமிழர்களைப்பற்றி இந்திய சர்க்கார் கவனிக்காத காரணத்தால், தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு நேரு போன்றவர்களின் கண்டனம் கிளம்பாத காரணத்தால் இலங்கை அரசு எதையும் செய்கிறது. கள்ளத்தோணியிலே வந்தார்கள் என்று சொல்லி எத்தனையோ பேர்களைச் சுட்டுத் தள்ளிய போதும் பாரதத் தலைவர்களின் உள்ளம் பதறவில்லை. தமிழகத்திலேயிருக்கும் காங்கிரசு அமைச்சர்களுக்கு இதயம் துடிக்கவில்லை. கங்காணித் தன்மைகளுக்குத் தங்களை விற்றுவிட்டவர்கள் தமிழர்களின் உரிமையைப் பற்றிப் பேசும் அருகதையை இழந்துவிட்டார்கள். தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் எவரெவர் கொடுமை செய்கிறார்களோ அவர்களுடன் தான் கொஞ்சிக் குலவுகிறார்கள்!

இதுவரை இலங்கை அரசு இந்தியத் தமிழர்களுக்கு மட்டுமே தீங்கு செய்தது. இப்போது இலங்கைத் தமிழர்களுக்கே தீங்கு செய்ய ஆரம்பித்திருக்கிறது.

உலகத்துக்கெல்லாம் போதனைகள் தருகின்றவர்பண்டிதநேரு! அவருடைய பார்வை இலங்கைத் தமிழர் மீது விழவில்லை. வட நாட்டவர்களுக்கு பாகிஸ்தானில் நேருவின் உருவம் கொளுத்தப்பட்டதுபற்றிய நெஞ்சுத் துடிப்பு இருக்கிறதே தவிர இலங்கைத் தமிழர்கள் மிருகத்தனமாக அடிக்கப்படுவதும், ஆடவரும் அவர் தம் அழகுத் துணைவியரும் அறப்போரில் தங்களது பங்கினைச் செலுத்தி, சிரிமாபண்டாவின் கொடுமைகளைக் களையத் துடிப்பதும் தெரியவில்லை! இன்னலைத் தாங்கிடும் இலங்கைத் தமிழர்களே! தாயகத்தின் குரல் உங்கள் நலன் நாடுகிறது. கழகம் உங்களை மறக்கவில்லை! அடக்குமுறைகள் ஒழிந்தே போகும்! நீவிர் வெற்றி பெறுக! வாழ்க! ★

கூடலரசன்

தமிழிலங்கை

"மாசரா"

இலங்கைத்தீவு என்றவுடனே, இன்றைய உலகில் சிங்களவர்கள் வாழிடம் என்றே, பலரும் எண்ணுகின்றனர்-பேசுகின்றனர்-எழுதுகின்றனர் !

தமிழரல்லாத பிறர், அவ்வாறு எண்ணிப் பேசி எழுதி வருவதில் வியப்பொன்றுமில்லை. தமிழர்களே கூட அப்படி நினைப்பதும், பேசுவதும், எழுதுவதும் வேதனைக்குரியது !

அதிலும், பல்வேறு சரித்திர-பூகோள-மனித வரலாற்று ஆராய்சிகளும், அத்தகைய ஆராய்ச்சிக்குரிய வசதிகளும், மலிந்த இந்தக் காலத்தில், தமிழன் தன்னுடைய நாட்டை வேருெருவன்-பிழைக்க வந்தவன் பெயரால் உரிமையாக்கிப் பேசுவதும் எழுதுவதும் சகிக்க முடியாத வேதனையைத் தருகிறது.

கீழ்கடலாகிய திராவிடக்கடலை, வங்காளக் கடல் என்பது போன்ற கொடுமை இது !

இன்றுள்ள இலங்கை, தமிழ் நாட்டுக்குத் தென் கிழக்கில், தெற்கு வடக்காக சுமார் 350 கல் நீளமும் கிழக்கு மேற்காக சுமார் 250 கல் அகலமும் உள்ள தீவாக இருக்கிறது.

தீவின் வடக்குக் கடைசி முனை தமிழ்நாட்டுக்கு மிக அண்மையாகவும், போகப்போக நூற்றுக்கணக்கான கல்தூரம் விலகியும் கடலால் பிரிக்கப்பட்டிருக்கிறது.

வேதாரண்யம் என்னும் திருமறைக் காட்டிலிருந்து, இலங்கையின் வட முனையிலிருக்கும் யாழ்ப்பாணம் சுமார் 10 கல் தூரமே இருக்கும்.

இவ்வாறு தமிழ்நாட்டுக்கு மிக்க அண்மையில் உள்ள இலங்கை, ஒரு காலத்தில் தமிழ்நாட்டுடன் சேர்ந்த ஒரே நிலப் பரப்பாகவோ-தீப கற்பமாகவோ, இடையில் ஒரு கல் அரைக்கல் நீர்ச்சந்தி கொண்ட தீவாகவோ இருந்திருக்க வேண்டும் என்பது நில நூல் ஆராய்ச்சி வல்லுநர்களின் முடிபாகும்.

கடலில் அமிழ்ந்து போனதாகக் கருதப்படும் இலெமூரியாக் கண்டம்பற்றிக் கூறுவோர், தமிழ்நாட்டின் தொல்பழம் பரப்பை, ஆஸ்திரேலியாக் கண்டம்வரை விரிந்து, நாமெல்லாம் பிரமித்துப் போகும் அளவு ஆப்ரிக்காக் கண்டத்தையும் இணைத்துக் கொண்டிருந்ததாகச் சொல்கிருர்கள்.

நாம், அந்த அளவுக்கு சிந்தனை செய்ய முடியாவிடினும், இப்போதுள்ள தமிழ்நாட்டுக்குத் தெற்கிலும், கிழக்கிலும், நீண்ட பெரிய நிலப்பரப்பை தமிழ்நாடு கடலுக்கு இரையாக விட்டிருக்கிறது என்று, மேற்போக்காக ஆராய்ந்தாலும் தெரிந்துகொள்ள முடியும்.

இராமாயணக் கதை முழுக்க முழுக்க கட்டுக்கதையாகவோ, சிறு உண்மையும் பெரும் பொய்யும் கலந்து எழுதப்பட்டதாகவோ, இருக்க வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர் முடிவு.

கதை எவ்வாறிருப்பினும், அதில் காணப்படும் இடங்களைப்பற்றிய குறிப்புகள், நூற்றுக்குத் தொண்ணூறு சரியாகவே இருக்கின்றன.

இராமாயணத்தின் முழு முதல் மூல ஏடான வான்மீகி இராமாயணத்தில், பாண்டிய மன்னர்களின் தலை நகரான கபாடபுரம் பற்றிய குறிப்புக்கள் இருப்பதாலும், கபாடபுரம்பற்றிய குறிப்புகள், சங்க இலக்கியங்களில் காணக்கிடைப்பதாலும், கபாடபுரம் கடலில் மூழ்கியதும், இற்றைய கன்னியா குமாரிக்குத் தெற்கில் இருந்ததுமான பழம்பெரு நகரம் என்பது, தெளிவாகத் தெரிய வருவதால், இராமாயணத்தில் கண்ட இடங்களைப்பற்றிய குறிப்புகளை நம்ப வேண்டியவர்களாக இருக்கிருேம்.

அதே இராமாயணத்தில் இலங்கையில் அரசு வீற்றிருந்தவன் இராவணன் என்பதும், சீதையைச் சிறைப் பிடித்ததும், இராம இராவணப் போரும் பிறவும் நம்பக்கூடியதாக இல்லை. காரணம்; இலங்கையில் அத்தகைய ஓர் பேரரசாட்சி இருந்த சான்றுகளோ, தடங்களோ எதுவும் இல்லை.

அதுபோலவே, இராமனுடைய தலைநகரமான சரயு நதிக்கரையிலிருக்கும் அயோத்தியும் கருதப்படத் தக்கதாக இருக்கிறது.

பேராசிரியர் இராகுல சாங்கிருத்தியாயன் என்பார் தாம் எழுதிய **வால்காவிலிருந்து கங்கைவரை** என்னும் ஆராய்ச்சி நூலில் அயோத்தி என்றுமே ஒரு தலைநகரமாக இருந்ததில்லை என்று, திட்டவட்டமாகக் கூறுகிருர்.

சிங்களவரின் புராதன புராணமான **மகாவம்சம்** என்னும் ஏட்டில் சிங்களவரின் வரலாற்றைக் கூறுமிடத்து :

வங்காள (கல்கத்தா) நாட்டு அரச குமாரனுன விஜயன் என்பவன் அவனுடைய தோழர்கள் சிலருடன் நாடுகடத்தப்பட்டான் என்றும், அந்த விஜயனும், அவன் கூட்டாளிகளும், இலங்கையிலுள்ள மலையடிவாரத்தில் கொண்டு வந்து விடப்பட்டதாகவும், அங்கே நாகரிகமற்ற காட்டு சாதியாரான மலைவாழ்நர் கூட்டம், விஜயனையும், அவனுடைய தோழர்களையும் ஆதரித்து, தங்கள் காட்டுச் சாதிப் பெண்களையே திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றும், அந்தக் கலப்புப் பரம்பரையே இன்றைய சிங்களவர் பரம்பரை என்றும், மகாவம்சம் கூறுகிறது.

சிங்களவர் பேசுகின்ற மொழியில் இன்றும் பல வடமொழிப் பிராகிருதச் சொற்களும் வங்காளச் சொற்களும், தமிழும், இனந் தெரியாத வேறு சில சொற்களும் இருக்கின்றன.

உறவு முறைச் சொற்களில் பல தமிழைப்போலவே காணப்படுகின்றன.

அறிஞர்கள் சிலரால் எழுதப்பட்ட இலங்கை வரலாறு 2400 ஆண்டுகளுக்குப் பிற்பட்ட வரலாற்றையே கூறுகின்றன. இன்றைக்கு 2400 ஆண்டுகளுக்கு முன்னல் இலங்கையில் வாழ்ந்தவர்கள் யார்? என்னும் கேள்விக்கு, இதுவரை கிடைத்த சிங்களம் தமிழ் வடமொழி நூல்கள் எதனுலும் சரியான விடை சொல்ல முடியவில்லை.

ஆனல், 3500 ஆண்டுகளுக்கு முன்னுலேயே இலங்கைத் தீவு தமிழர்களாலும் வடவர்களாலும் அறியப்பட்ட ஒன்று, என்பதுமட்டும் நமது சங்க இலக்கியங்களாலும் வடமொழி இராமாயணத்தாலும் தெளிவாகிறது.

அப்படியானல் அக்கால இலங்கையில் வாழ்ந்தவர் யார்? என்ற கேள்வியே மீண்டும் தோன்றும் !

இந்தக் கேள்விக்கு விடை ஆராய்ச்சி பூர்வமாகவே காண வேண்டியவர்களாக இருக்கிருேம்.

இலங்கையை நேரில் கண்டு ஆராய்ந்தவர்கள், தென் பகுதியின் நிலக்கூறு ஒரு விதமாகவும், வட பகுதியின் நிலக்கூறு வேறு விதமாகவும் இருப்பதை நன்கறிவார்கள். இந்த இரு வேறு கூறுகளையும், முறையே தென்னிலங்கை என்றும் வட இலங்கை என்றும் வைத்துக்கொள்வோம்.

தென்னிலங்கைக்கும் வட இலங்கைக்கும் ஏறக்குறைய நடுப்பகுதியாக இருப்பது அநுராதபுரம் என்றே சொல்லலாம்.

அநுராதபுரத்திற்குத் தெற்கே சிங்களவர் அடர்த்தியாக வாழ்கிருர்கள். வடக்கே தமிழர்கள் அடர்த்தியாக வாழ்கிருர்கள்.

ஆதலால் இனக் கூறுலும் வட இலங்கைக்கும், தென்னிலங்கைக்கும், நடுப்பகுதி அநுராதபுரம் என்றே கூற வேண்டும்.

வட இலங்கையில் மிகப் பெரும் பகுதி விவசாயத்திற்கு ஏற்ற சம நிலப் பகுதியாகவும், தென்னிலங்கையில் மலைகளும், சரிவுகளும், பள்ளத் தாக்குகளும், கணவாய்களும், நிறைந்து சம வெளி சுருக்கமாக இருக்கிறது. நிலக்கூறுப்படி வட இலங்கையே விவசாயம் செழித்த இடமாக இருக்கிறது.

பழங்கால நாகரிகமும், செல்வச் செழிப்பும், விவசாயத்தை முன் வைத்தே ஏற்பட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது, இந்த அடிப்படையில் பார்த்தால் வட இலங்கையில் நாகரிகமும், செல்வ வளமும் உள்ள தமிழர்கள் இருந்தார்கள் என்பதும் அவர்களே நாகரிகமக்கள் என்பதும் தெளிவு. வளமற்ற காட்டுப் பகுதியில் வேட்டை மீன் பிடித்தல் முதலிய அற்பத் தொழில் புரிந்து சிங்களவர் வாழ்ந்திருப்பார்கள் என்பதும் தெளிவு.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இலங்கையில் ஏற்பட்டது முதல் நேற்று சிங்களவர் ஆதிக்கம் வந்ததுவரை கல்வி, அறிவு, நாகரிகம், நாணயம் ஒழுக்கம் ஆகிய பலவகையாலும் தமிழர்கள் சிறந்திருந்தார்கள்—இன்றும் அப்படியே இருக்கிருர்கள்.

அத்தகைய மேம்பாடு, பத்துநூறு ஆண்டுகளுக்குள் முயன்று பெறக்கூடியதோ, தற்செயலாக அமைந்து விடக் கூடியதோ அல்ல-பன்னூறு ஆண்டுகள் தொடர்ந்து வரும் நல் வாழ்வுப் பயனே நாகரிகத்தின் அடிப்படை என்றுல் அறிவுடையோர் மறுப்பதற்கில்லை,

வட இலங்கைத் தமிழர்கள் தான், இலங்கையின் பழம் பெரும் அதிகார வர்க்கத்தினர் என்பதை நாம் நினைவில் இருத்த வேண்டும்.

இதற்கு நல்லசான்று, சிங்கள மொழியில் தமிழ்ச் சொற்கள் பரவியது போல், வட இலங்கைத்தமிழில் சிங்களச் சொல்இல்லாதது ஒன்றே போதுமானது.

கட்டுரை நீள்வதால் சிந்தித்துணரத்தக்க சிலகுறிப்புகளைக் கூறி முடிப்போம்.

இலங்கையின் பூர்வீக குடிகள் தமிழர்கள்தான்–அதற்கு முந்திய குடிகள் யாருமில்லை என்பதும், அவர்களின் பூர்வீக நாடும், நகரமும், அநுராதபுரத்திற்கு வடக்கேதான் என்பதும், அசைக்க மறுக்க முடியாதது.

சுமார் 2400 ஆண்டுகளுக்குள் தென்னிலங்கைக் காடுகளில் பெருகி வந்த சிறுகூட்டமே சிங்களவர் என்பதும் ஆராய்ச்சியால் உணரக் கிடக்கிறது.

அசோகன் காலத்தில் அவனுடைய மகள் சங்கமித்திரை என்பவள், அநுராதபுரத்தில் புத்த விகாரத்தில் நட்டுவிட்டுப் போன புத்தர்களின் புனிதமரமான அரசமரம்ஒன்று, சுமார் 10வருடத்திற்கு முன்னுல்வரை பசுமையோடு இருந்தது. சங்கமித்திரை வருகைக்குப் பிறகுதான் சிங்களவர் சிறிது நாகரிக மணம் பெற்றனர் என்றே கூறலாம். அநுராதபுரம் என்றுலே, தொள்ளாயிரம் அரசர்கள் ஆண்ட இடம் :என்று சிங்கள மொழியில் அருத்தமாகும். சிங்கள வரலாற்றில் 250 அரசர்கள்பற்றிய விவரம்கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சங்கமித்திரை வருகையின்போது தென்னிலங்கையில் சிங்கள ஆட்சியும் வட இலங்கையில் தமிழர் ஆட்சியும் இருந்தது.

★

வீரிய விர்த்தி மாத்திரை

மித மிஞ்சிய உஷ்ணத்தினுலும், அமித போகத்தினுலும் தாது நீர்த்துப் போகுதல் சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்பு தளர்ச்சி, சக்திகுறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, சர்வநாடி நரம்புகளுக்கும் வலுவைக் கொடுக்கவல்ல மிகச் சிறத்த வீரிய மாத்திரை.

24 மாத்திரை புட்டி ரு. 6-00

லேபனம் மெழுகு

குறி: சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையுடைதல், தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற் பூசும் மெழுகு.

1 அவுன்சு புட்டி ரு. 4-00

தேவைக்கு எழுதவும் :
சித்தவைத்திய பண்டிட்
எஸ். வி, ஆர். கண்டர்,
ஆர். ஐ. எம். பி.
இராஜசித்த வைத்தியசாலை
சேலம்-2 (S. I.)

விலைவாசி இறங்காதது ஏன்?

—சென்ற இதழ்த் தொடர்ச்சி—

பர்மா ஏராளமாக அரிசி ஏற்றுமதி செய்யும் நாடு. ஆங்கில ஆட்சிக்காலத்தில் தமிழ் நாட்டுக்கு பர்மிய அரிசி ஏராளமாக வந்தது.

இரண்டாம் உலகப் போரில் வங்காளக் கடலில் கப்பல் நடமாட முடியாத நிலை ஏற்பட்டு பிரிட்டனுடைய பாதுகாப்புக் கப்பல்களான "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்" "ரிபல்ஸ்" என்ற பெயர்களுடைய இரு பெரும் போர்க் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டு அபாயப் பிரதேசம் ஆகும் வரை, பர்மா அரிசி தமிழ் நாட்டுக்கு வந்து கொண்டிருந்தது.

அதன் பிறகு போர் முடிந்த உடனே சுதந்திரம் என்ற புனை பெயரில் வடவர் ஏகாபத்தியமும் தோன்றியது.

"அடிமைப்பட்ட தமிழ் நாட்டுக்கு—திராவிடத்திற்கு அரிசி இறக்குமதி ஒரு கேடா" என்ற, கருத்தில் பர்மா அரிசி இறக்குமதியை அடியோடு கை விட்டனர்.

இப்படி வேண்டுமென்றே இறக்குமதியை நிறுத்திவிட்டு "பர்மாவும் பற்றுக்குறை நாடு தான்; அரிசி ஏற்றுமதி செய்ய அதனுல் முடியாது" என்று, ஆட்சியாளர் பச்சைப் பொய் கூறித் திரிகின்றனர்.

கடந்த ஆண்டில் பர்மிய மந்திரி ஒருவர் சொன்னுர்.

"நாங்கள் வழக்கம் போல் அரிசியை ஏற்றுமதி செய்து கொண்டுதான் இருக்கிறேம். ஆனுல், இந்தியாவுக்கு அனுப்பவில்லை. காரணம்: இந்தியா தன்னிறைவு பெற்று இறக்குமதியை ஒழித்து விட்டதால் நாங்கள் வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறேம். சில சமயங்களில் மழை இல்லாமல் விளைச்சல் குறைந்து விட்டதென்று இந்திய அரசாங்கம் அரிசிகேட்டு வருகிறது. ஆனுல், நாங்கள் ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யும் நாடுகளை விட்டு விட்டு, இடை இடையே ஏற்றுமதி செய்யக் கோருகிற இந்தியாவின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறேம். **ஆண்டுக்கு இத்தனை டன் அரிசி வாங்கிக்கொள்கிறேம் என்று ஒப்பந்தம் செய்து கொண்டால், நாங்கள் இந்தியாவுக்கு அரிசி அனுப்பத் தயாராக இருக்கிறேம்."**

பர்மா அமைச்சர் இப்படிக் கூறுகிறுர். அதே நேரத்தில் விருதுநகரில் பிரபல இறக்குமதி ஏற்றுமதி வியாபாரியாக இருக்கும் ஒருவர் சொன்னுர்:

இந்திய அரசாங்கம் தாராளமான இறக்குமதிக்கு அனுமதி கொடுத்தால், அயல் நாடுகளிலிருந்து அரிசி முதலிய உணவுப் பொருளை இறக்குமதி செய்து உணவுப் பஞ்சத்தைப் போக்க நாங்கள் தயார்.

இப்படிப்பட்ட செய்திகள், இந்திய அரசாங்கத்தின் கண்மூடிப் போக்கையும், புரட்டுப் பேச்சுக்களையும் அம்பலமாக்கி வருகின்றன.

நாட்டின் விலைவாசி ஏற்றம், ஏழைய எளிய மக்களை அரைத்துப் பிழிந்து, பணக்காரர்களுக்குப் பணம்சேர்க்கப் பயன்படுமே தவிர வேறு பயன் எதுவும் இல்லை.

ஆனுல், ஆட்சியில் இருப்பவர்கள் புதிய புதிய லைசென்சு—பெர்மிட்டு முறைகளைஏற்படுத்தி கட்சிக்காரர்கள் — ஆட்சியின் அன்புக்குரியவர்கள் ஆகியோருக்கு வழங்கி தொடர்ந்து ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ள விலைவாசி ஏற்றம் பயன் படுகிறது.

ஐந்தாண்டு திட்டங்களுக்கு உள்நாட்டுப் பணப்பெட்டிகளிடம் வட்டிக்குப் பணம் வாங்கவும், தேர்தல் செலவுகளுக்கு பெருந்தொகைகளை நன்கொடை என்ற பேரால் வாங்கிச் செலவு செய்யவும், விலை ஏற்றமும், அதன் தொடர்பான லைசென்ஸ் பெர்மிட் கொள்கையும், பயன் படுகிறது.

ஐந்தாண்டுத் திட்டங்கள் முழுக்க முழுக்க வடவரின் முன்னேற்றத்திற்கே செலவிடப்படுவதாலும் அதன் பயன் வடநாட்டில் பெரும் பெரும் கோடீசுரர்களை ஏற்படுத்த உதவுவதாலும் வடநாட்டில் உள்ளவர்கள் விலைவாசி ஏற்றம் பற்றிக் கவலைப்படப் போவதில்லை. மாறுக மனமுவந்து வரவேற்கலாம்.

இந்திய அரசாங்கம் எவ்வளவு லைசென்ஸ் — பெர்மிட் முறைகளை வைத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புவோர்—

இந்திய அரசாங்க வெளியீடான Red-Book என்னும் புத்தகத்தைப் பார்த்தால் தெரிந்து திகிலடைவார்கள்.

புத்தகத்தின் விலை ரூ 6-25. மிகப்பெரிய பாரதம் போல், 3 அங்குலக் கனமும், 8 அங்குல நீளமும், 6 அங்குல அகலமும் உடையதாக சிவப்பு அட்டையுடன் அந்தப் புத்தகம் காட்சியளிக்கிறது.

அந்தப் புத்தகம் ஒன்று போதும் இந்திய அரசாங்கத்தின் குருட்டுப் போக்கைத் தெரிந்து கொள்ள.

இத்தகைய ஆட்சியின் போக்குகள் அதனுல் விளையும் தீமைகள் ஆகியவற்றை ஏழை எளிய மக்கள் அறிந்துகொள்ள வசதியில்லை—வாய்ப்பில்லை.

அவர்கள் தெரிந்திருப்ப தெல்லாம் பண்டிதநேரு நல்லவர். காமராஜ் கெட்டிக்காரர், இல்லாவிட்டால் ஈ. வெ. ரா பாராட்டுவாரா, எலிசபெத் அரசியே இந்திய ஆட்சியை வியந்தாளே என்பதுதான்!

உள்ளே வளரும் அக்கிரமங்களை அநீதிகளை உணர அறிவில்லை—உணர்த்த ஆளில்லை—உணர்த்தினுல் உற்றறியும் பண்பில்லை, ஒன்றுமில்லை.

★

எம். எஸ். இராமசாமி

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அஷ்வ : சரி...ஊர்வசியாக...

பிரபா : (அவசரத்தோடு) நானே நடிக்கிறேன்.

புத்த : பார்த்தீர்களா கவிஞரே - அதற்குள்ளாகவே பிரபாவிற்குப் பொறுக்க முடியவில்லை.

அஷ்வ : சரி நண்பரே! பிரபாவே ஊர்வசியாக நடிக்கத் துடிக்கும் போது, எனக்கு மறுத்துச் சொல்ல எப்படி மனம் வரும்?

காட்சி 3. சரயூநதியின் மணற்கரை.

அது முன்னிலவுக்காலம். அடிவானத்திற்குள் நிலவு மறைந்து நெடுநேரமாகிவிட்டது. பாலுண்டு கொண்டிருக்கும்போதே தாயைத் தழுவித் தன்னை மறந்து தூங்கிவிடும் குழந்தையைப் போல - ஒளிமங்கிய அந்த இருளின் அரவணைப்பில் சுகமாக உறங்கிக்கொண்டிருந்தது சாகேத நகரம். சரயூநதியின் 'கலகல' ஒலியைத் தவிர, அதன் வெண்மணற் கரையில் வேறு சந்தடியே இல்லை. முழுநிலவைத் தூளாக்கி வானமெங்கினும் தூவிவிட்டது போல் ஒளியிரைத்துக்கொண்டிருந்த நட்சத்திர வெளிச்சத்தால், அந்த இரவிலும் அலை அலையாகப் படிந்துகிடந்த சரயூநதிக் கரையின் வெண்மணற் திட்டுகள் அழகாகத் தெரிந்தன. மதுவுண்ட போதையிலே மயங்கிக் கிடப்பதுபோல், அம்மணற்பரப்பில் சொல்லத் தெரியாத சுகத்தோடு மல்லாந்து படுத்திருக்கிருள் பிரபா. யாழ்மீட்டும் ஞாபகத்தில் அவளின் இடுப்புக்குமேல் விளையாடிக்கொண்டிருந்த அஷ்வகோஷின் கரங்கள், அவள் தலையை அன்போடு தூக்கி, அதில் ஒட்டியிருந்த மணலை ஆதரவோடு தட்டி, தன் மடியின்மீது வைத்துக்கொள்கின்றன. வார்த்தைகளே இல்லை; கன்னங்கள் கனிந்துகொண்டிருந்தன; இதழ்கள் வெளுத்துக்கொண்டிருந்தது. ஊருக்குள்ளே பலருக்கு முன்னே அவர்கள் மேடையில் தொடங்கிய காதல் நாடகம், இப்பொழுது ஊருக்கு வெளியே அவர்களுக்குள்ளே சுவையாகவும் சுகமாகவும் நடந்துகொண்டிருந்தது.

அஷ்வ : பிரபா...

பிரபா : ஹூம்...

அஷ்வ : என்ன பேசாதிருக்கிருய்?

பிரபா : இப்பொழுதுதானே பூட்டியிருந்த வாய்க்குப் பூரண விடுதலை தந்திருக்கிறீர்கள். கவிஞ!

அஷ்வ : மயக்கமே!

பிரபா : யாழையும் எடுத்துக்கொண்டு வந்திருந்தால்—இசைத்துக் கொண்டிருக்கலாமில்லையா?

அஷ்வ : இனி எனக்கது தேவையே இல்லை.

பிரபா : யாழா?

அஷ்வ : ஆம்.

பிர்பா : ஏன்!

அஷ்வ : என்னையே மறக்கச் செய்ய நீயிருக்கிருய். எனக்கே சொந்தமாக உன் இனிமையான இதழ்களும், செழுமையான தோள்களும் இருக்கவே இருக்கின்றன. நம் முகமும் முகமும் இணையட்டும்; மூச்சும் மூச்சும் கலக்கட்டும் - இந்த இன்ப அணைப்பு எப்போதுமே நமைவிட்டுப் பிரியாதே இருக்கட்டும். இதேபோதும், யாழும் இசையும், கவியும் புகழும் எனக்கினி வேண்டாம்.

பிரபா : மயக்கம் இன்னுமா தெளியவில்லை.

அஷ்வ : தெளியவே வேண்டாம்; சுவையே போய்விடும்.

பிரபா : அடடா! நேரம் எவ்வளவு ஆகிவிட்டது; வாருங்கள் போகலாம்.

—அடுத்த இதழில் முடியும்—

தென்றல்

ஏப்ரல் 15-ம் நாள் இதழ்

பேராசிரியர்

ரா. பி. சேதுப்பிள்ளை

அவர்களின்

வெள்ளிவிழா மலராக வெளிவரும்.

பேராசிரியரின் வாழ்க்கை வரலாற்றை பேரறிஞர் பலர் எழுதுகின்றனர்.

பேராசிரியரின் மாணுக்கர் பலர், அவருடைய வாழ்வின் சுவைமிக்க நிகழ்ச்சிகளைத் திரட்டித் தருகின்றனர்.

பேராசிரியரின் நண்பர்கள் பலர் அவருடைய நுண்ணறிவுத் திறனை வியந்து கருத்தோவியம் தீட்டுகின்றனர்.

பேராசிரியரின் மணிமொழிக் குறிப்புகள் பல இடம் பெறுகின்றன.

மலர் $7\frac{1}{2}'' \times 10''$ அளவினதாய் 32 பக்கங்களுடன் உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டு, பேராசிரியரின் உருவோவியம் முகப்பை அழகு படுத்த சிறப்புடன் வெளிவருகிறது.

விலை 25 காசுகள்.

வெண்பாப் போட்டி

15. வேலூர் என தொடங்கி திருவொற்றியூர் என முடிக்க.

வேலூரில் தோன்றிய வேண்டா விவாதங்கள்
காலூன்ற வண்ணம் கழகத்தைக் காத்திட்ட
பேர்பெற்ற நற்பெருமை ஓர்ஊருக் குண்(டு)அந்த
ஊர்தான் திருவொற்றி யூர்!

—பிரம்பை. அறிவன்பன், சென்னை-11.

வேலூரில் வேர்விட்ட வேண்டாத வேற்றுமைக்கு
கோலூன்றும் செய்கை திருச்சியிலே—காலூன்றும்
இப்போக்கை நீக்கி இதயங் கலந்தவிடம்
ஒப்பில் திருவொற்றி யூர்!

—க. போ. இளம்வழுதி, கலிதீர்த்தான் குப்பம்.

வேலூர் நிலையறிந்து வேலையற்ற மந்தி(ரி)கள்
காலோய ஆடின கத்தினவே—வாலறுத்தே
காரிருளில் தள்ளிக் கதவடைத்து விட்டதுகாண்
சீரார் திருவொற்றி யூர்!

—மு. இறைவிழியன், புதுவை.

வேலூர் பெருநகர்தான் வேதனையைத் தந்ததரோ!
சேலூர் வளவயல்சூழ் சீர்நாடர்—நாலூரும்
போற்றும் பொலிவழகைப் பாங்குடனே யீந்ததுவே
ஏற்றும் திருவொற்றி யூர்.

—கி. வேலாயுதன், மதுரை.

வேலூர்க் குழப்பத்தால் வீழாதோ? என்றெண்ணி
வாலாட்டம் போடுகின்ற மாக்களே!—மாளாது;
சோர்வு தெளிந்து திருவிடத்தை மீட்கவே
சேர்ந்தோம் திருவொற்றி யூர்.

—மு. வில்லவன், திண்டுக்கல்.

வேலூர் நமையழிக்கும், வேற்றூர் உறுதிகொண்டார்;
வேலூர் துவக்கிவைத்த வேதனையை—மாற்றிவைத்து
சூழ்தோழ ருள்ளத்தே சூழ்ச்சியில்லை என்றோதும்
வாழி திருவொற்றி யூர்!

—அவா. இன்பதாசன், சென்னை-1.

வேலூர் தொடங்கிய வேதனையார் மக்களெல்லாம்
வேலுறுத்தும் மார்பினராய் வெம்பினரே—கோலோச்சும்
மன்றர் தலைகவிழ மக்கள் மனமகிழ
வென்ற திருவொற்றி யூர்!

—அ. த. வேலன், அய்யலூர்.

வேலூரில் நெஞ்சத்து வேதனையால் நொந்துழன்று
சாலை வழிநடந்தேன் சாகாமல்—ஆலாக
நின்ற நமதண்ணா நெஞ்சின் நிழலடியில்
ஒன்று திருவொற்றி யூர்!

—தமிழரசன், சமுவை.

வேலூர்கண் டின்பம் மிகப்பெற்ற வேற்றகத்தார்
மேலூர் பலதோன்றி வேலூராய்—ஏலாமல்
மாயாதா தி. மு. க. என்றெண்ணி வந்தார்க்குப்
பாயும் திருவொற்றி யூர்!

—செல்லம், கோவை.

வேலூரில் ஏற்பட்ட தத்துவவி ளக்கத்தால்
மீளாத் துயரத்தீ சூழ்ந்துமே—நீள்பெருமை
பெற்றுள்ள காவலரால் தீர்த்ததே சீர்மிகப்
பெற்ற திருவொற்றி யூர்!

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

வேலூர் விளைத்திட்ட வேதனையால் நம்கழகம்
ஆலைவாய்க் கன்னலென ஆயிற்றே—ஏலாத
அந்தத் துயர்நீக்கி ஆற்றல்மிகு நற்படையைத்
தந்த திருவொற்றி யூர்!

—கோ. மிருதஞ்செயன், சென்னை-30.

வேலூர் பகைசூழ் வேதனையைத் தூண்டியவர்
ஆலாலம் உண்டவர்போல் ஆயினர்காண்—ஞாலத்தில்
கொல்லும் பகையொழிக்கக் கூடி முடிவெடுத்த
நல்ல திருவொற்றி யூர்!

—சி. பி. சாமி, ஆற்காடு.

வேலூர் ஒருசாணை வேற்றுமை தீப்பொறிகள்
சேலார் திருச்சி பதம்பார்த்தல்—மேலேயோர்
உண்ணாத நோன்பில் ஒருமித்தல் பாசறையே
அண்ணா திருவொற்றி யூர்!

—ந. இராமச்சந்திரன், சென்னை-29.

வேலூர் தனில்நிகழ்ந்த வேதனையால் வெந்திட்ட
வேலூன்றும் முன்னணி வீரராம் வேங்கைகளின்
நீங்காத கொந்தளிப்பை நீக்கியே நீணிலத்தில்
ஓங்கும் திருவொற்றி யூர்!

—மீனவன், நெய்வேலி.

வேலூர் புலியெனவே வெம்பினரே நந்தோழர்
பாலூர் பழமுண்டோர் பற்றலரே—வேலூரில்
தந்த விளைவிவற்றைத் தான்மாற்றி வைத்ததே
அந்த திருவொற்றி யூர்!

—பொ. வெங்கடேசன், சென்னை-1.

வேலூர் பிரித்ததென்று வீணர் மகிழ்ந்திருக்க
சீலர் திருவிடத்தார் சேர்ந்தொன்றாய்க்—காலமெலாம்
இல்லை நமக்குள்ளே எப்பிரிவும் என்றாய்ந்த
நல்லூர் திருவொற்றி யூர்!

—தி. குமாரராசு, சென்னை-1.

வேலூரைக் கேட்டதும் வேதனை யுற்றதும்
தேளென வந்த திருச்சியும்—மாளவே
சம்பத்தின் நோன்பிலே தம்பியர் கூடினர்
தெம்பூர் திருவொற்றி யூர்!

—தன. வள்ளுவன். மஞ்சைநகர்.

வேலூர் நிகழ்ச்சிகளும் வீணர்கள் பேச்சுகளும்
சீலை மடிதிரைபோல் தீர்ந்தே—சீலமிகும்
அண்ணா இருக்கையிலே அன்புக் கழிவில்லை
கண்டீர் திருவொற்றி யூர்!

—மு. வரதராசன், துறையூர்.

வேலூரி லேற்பட்ட வேண்டாத சம்பவந்தான்
வேலாகப் பாய்ந்துளத்தை வேதனைக் குள்ளாக்கப்,
பாரிகழுஞ் சிக்கலினைப் பக்குவமாய்த் தீர்த்தநல்
ஊராந் திருவொற்றி யூர்!

—குறளன்பன், பழையனூர்.

வேலூர் மனப்பான்மை வேண்டாமிங் கெந்நாளும்
காலூன்றி ஓங்கட்டும் கண்ணியம்—பாலூட்டி
சீராரப் பாடுபடும் தாயாவீர் சிந்திப்பீர்
தேரீர் திருவொற்றி யூர்!

—வ. தமிழரசு, சென்னை-21.

வேலூர் நிகழ்ச்சியால் வேதனைக் குள்ளானோம்;
காலம் திருத்துமெனக் காத்திருந்தோம்;—மூலைதொறும்
ஓலமிட்டோர் வாயடைக்க ஒற்றுமையை ஈந்ததுகாண்!
கோலத் திருவொற்றி யூர்!

—முகில்வண்ணன், செய்துங்கநல்லூர்.

வேலூரில் காலை யரும்பிய வேதனை
மாலை மறைந்த விடம்;மானே!—சாலவும்
மண்ணில் கழகத்தின் காவலர் கூடிய
வண்ணத் திருவொற்றி யூர்!

—மதுரைமாறன், ஈரோடு.

வேலூர் பெருநகரில் வித்திட்ட வேதனைக்கு
பாலூர் முகத்தில் பரிவுதனைக் காட்டியபின்
உண்ணாமை நோன்பில் உளந்திருத்தி வெற்றிமிகக்
கொண்டாய் திருவொற்றி யூர்!

—குறள்பித்தன், எக்ஞபுரம்.

வேலூர் துவங்கிய வேதனையைத் தீர்த்திடவே
ஏலாமல் நெஞ்சம் எரிந்திடப்—பாலூராய்த்
தோன்றிப் பயன்விளைத்துத் தொன்மைச் சரித்திரத்தில்
ஊன்றும் திருவொற்றி யூர்!

—கோ. சோ. ஜெயபால், தெற்குப் பொய்கைநல்லூர்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு, தொலைபேசி எண் 83510.